உ

சிவமயம்.

ஆராய்ச்சி யிலக்கம் VI.

# திருவாசகம் போற்றித் திருவகவலிற்காணப்படும் "மூவா நான் மறை" என்னுஞ் சொற்றொடரின் பொருள் ஆராய்ச்சி.

30 NOV 1923

திரு. மா. சாம்பசிவம் பிள்ளை
எழுதியது.

---

ருதிரோத்காரி௵ வைகாசித்திங்கள் ௨௯ம் நாள்

திருச்சிராப்பள்ளி :
லைகூல அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1923. அணா 4]

G23:4117x',1
N23.

உ

சிவமயம்.

# திருவாசகம்

## போற்றித்திருவகவலிற் காணப்படும்

## "மூவா நான் மறை"

## என்னுஞ்

## சொற்றொடரின் பொருள்

## ஆராய்ச்சி.

30 NOV 1923

---

இஃது திரிசிரபுரம்

**திரு. மா. சாம்பசிவப் பிள்ளையால்**

எழுதப்பெற்றது.

---

மதுரை ஜில்லா

பெரியகுளம் ஸ்ரீமான் உமையகுஞ்சரம்

**சுப்பையா பிள்ளையவர்களின்**

விருப்பத்தின்படி அவர்கள் நன் முயற்சியினால்

திருச்சிராப்பள்ளி

ஜனானுகூல அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

சாலிவாகன சகாப்தம் ௲௮௪௫

ருதிரோத்காரி வருடம்

வைகாசித்திங்கள் உ௯-ம் நாள்.

894.811101
2980

N123

179856

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மதிப்புரை.

---

## யாழ்ப்பாணத்துவண்ணைநகர்
## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்
## எழுதியது.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகமாகிய நான்காவது போற்றித் திருவகவலில் "மூவா நான் மறை முதல்வா போற்றி" என்னும் கூச-ம் அடியி லுள்ள மூவா நான்மறை என்கின்ற சொற்றொடருக்குத் திருவாசக விரிவுரையாசிரியர் எழுதிய பொருள், பொருளன்றென மறுத்து மூவா நான் மறைச் சொற்றொடராராய்ச்சியென ஆராய்ச்சியாசிரியர் எழுதியிருக்கும் விஷயத்தை யாம் பார்வையிட்டுப் பேரானந்தமுற்றாம்.

ஆராய்ச்சியாசிரியர் தாம் மேற்கொண்ட விஷயத்தைப் பலப் பல பலிஷ்டப் பிரமாணங்களாற்றாபித்துப் போகும்போக்குக் கற்ற வருளத்திற்பற்றி நின்று கழிபேருவகை பயக்குமென்பதொருதலே.

ஆசிரியரால் ஆண்டாண்டுக் காட்டப்படும் பிரமாணங்களின் உண் மைப் பொருள் உணர்ந்துவைத்தும் விருத்தம் உரைப்பின் அஃது இருவகை வேதாகம வழக்கோடும் முரணிக்கூறுவார் கூற்றாமெனத் தள்ளற்பாற்றன்றிக் கொள்ளற்பாற்றன்றென விடுப்பர் அறிஞர்.

"நான் மறை" ஆரியவேதமே என்பதற்கு ஆராய்ச்சி ஆசிரியர் எடுத்துக் காட்டிய சைவநூற்பிரமாணங்களைப்போல, திருவாசக விரிவுரை ஆசிரியரும் "நான் மறை" தமிழ்வேதம் என்று கூறும் கூற்றுக்குத் தக்க சைவநூற் பிரமாணம் காட்டாது வாளா தாமே தமிழ் வேதம் என்று கூறின் சைவநூன் மாண்புதேர்ந்த மெய்யறி வாளர்களால் அக்கூற்று அங்கீகரிக்கப்படமாட்டாதென்பது, சமண நூலாகிய சீவகசிந்தாமணிக்கு உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க் கினியர் சமணசமய நூலின் உண்மைப்பொருள் உணருதற்கு முன்னர்

அச்சமயக்கொள்கைக்கு மாறுபட எழுதிய உரை அச்சமண சமய வித்துவான்களால் அங்கீகரிக்கப்படாமையின் வைத்துணர்ந்து கொள்க.

இன்னும் கட்டு நீங்கி வீடுபெற்ற மெய்கண்ட தேவரும் அவர் மாணாக்கர் அருணந்தி சிவமும் "புறன்கேளாம்," "அவர்க்கறையோ சொல்லொணாதே" என முறையே போதத்தும் சித்தியினும் திருவாய்மலர்ந்தருளியிருத்தலைக் கண்ணுற்று உண்மை கடைப்பிடித்திருக்கும் மெய்யறிவாளர் முன்னிலையில் அப்பிடியிலார் உரைப்பனவெல்லாம் என்ன பயன்றருவன என்றொழிக.

ஆராய்ச்சி ஆசிரியர் தமிழோடு ஆங்கிலமும் கற்றுச் சப் மாஜிஸ்ரேட் (Sub-Magistrate) உத்தியோகம்பெற்று நடாத்தி வந்து முதுமைப் பருவம் அடைந்தமையால் உபகாரவேதனம்பெற்று இளைப்பாறுதற்குரிய நிலைமையிலிருந்துகொண்டும் நந்தமது சைவசமயாபிமான முதிர்ச்சியின் மேலீட்டால் உத்தியோகம் நடாத்திய சக்தி வாய்ந்த காலத்தில் "மறைகணிந்தனை சைவநிந்தனை பொறுமன" முடையராய் வேதாகமநிந்தனை சிவநிந்தனை சிவனடியார் நிந்தனை யாவராயினுஞ் செய்யக் காணின் அவரைக் கண்டனம் எழுதிக் கண்டித்து வந்ததுபோல, இத்தளர்ந்த முதுமைப் பருவத்தினும் சைவசமயிகள் உண்மை உணர்ந்து நன்மைபெறுமாறு வேதாகமமாதி தூஷணஞ் செய்வோர்களையும் அவர்கள் கொள்கைகளையும் முக்கியப் பிரமாணங்களாற் கண்டித்தலாகிய பெறலருஞ்சிவபுண்ணியஞ் செய்தலைக்குறித்து நாம் நன்றிபாராட்டுதல்போல, உண்மைச் சைவசமயிகள் யாவரும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையரேயாம்.

தற்காலத்துச் சைவப்பிரசாரகரெனத் தம் பெயர் நிறுவிப் பிரசங்க முதலியன செய்வாருட் சிலர் சைவ சமய நூல் வரம்பழித்துச் சைவப்பெரியார் கோட்பாட்டுக்கு மாறாகப் பேசுதலும் உரையெழுதுதலுஞ் செய்து தம் மகிமை முற்றும் குன்றுவித்தலேயன்றி நீதிகோடும் அப்பிரமாணிகளெனக் கருதித் தம்மை மெய்யறிவாளர்கள் அங்கீகாரஞ் செய்யாதொழியுமாறும் செய்துகொள்ளுதல் அவர் அறிவிற்கழகன்று. சமயகோடி நெறி நின்றார் பல்லாயிரகோடியருள் சைவப் பிரசாரகர் சிலர்போலத் தஞ்சமய சின்னம் அணிந்து கொண்டு தம் சமய நூல் வரம்பழித்துத் தம் சமயப் பெரியார் கொள்கைக்கு மாறாகப் பேசுதல் உரையெழுதுதல்களைச் செய்து

தம் பெருமை இழந்து தம் சமயத்தாரால் அப்பிரமாணிகர்கள் எனக்கொள்ளப்பட்டார் ஒருவரையேனும் கண்டிலம். ஒருகால் தம் சமயக் கொள்கை சரியன்றெனக் காணப்படின் அச்சமயத்தை விடுத்துத் தமக்குச் சரியென்று காணப்பட்ட மதப்பிரவேசஞ் செய்துகொண்டு அதன்வழி ஒழுகுவார் பலரைக் காண்கின்றாம். அங்ஙனம் ஒழுகுவோர் நீதிகோடாதவர்களென்றும் பிறர்க்கேதஞ் செய்யாதவர்களென்றும் அறிஞர்களாற் புகழப்படுகின்றார்கள். நம்ம வர்களும் தமக்குச் சைவசமயம் சரியன்றெனக் காணப்படின் அதனை முற்றும் கைவிட்டுத் தமக்குச் சரியெனக் காணப்பட்ட மதத்திற் பிரவேசித்து அதன்வழி ஒழுகுதலே அவர்க்குத் தகுதிப்பாடாம். அது செய்யாதுவிடுத்துச் சைவசமயத்துக்குரிய விபூதி உருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு சைவநூல் வரம்பழித்துப் புதுவரம்புகட்டிச் சைவப்பெரியார் கொள்கைவிடுத்து வெள்ளைப் பெரியார் கொள்கை தொடுத்துத் தாம் சைவப்பிரசாரகரென்று சொல்லி அறிஞர் அரங்கேறுதல் அவர் தமக்கே நாணத்தை உண்டாக்கா நிற்கும்.

இவர்கள், பயிருக்குக் காவலென நிறீஇய வேலியே பயிரை மேய்ந்தாற்போலத் தம்மைச் சைவப் பிரசாரகரென்று சொல்லிச் சைவநூல் வரம்பழித்து முன்னையூழ்வலியான் முற்றிய முக்குணத்துள் ஒன்றாகிய தாமத குணவயத்தாற் சைவநூற்கு எத்துணை விருத்தவுரை உரைப்பினும் நம் சைவ சமயநூல்கள் அவ்வுரையால் மகிமை குன்றுதலும் நமது சமயக்கொள்கை அழிதலும் எக்காலத்தும் இலவாம் எனக் கடைப்பிடிப்பர் சைவநூல் இயல்புணர்ந்தோர்.

இவ்வாறு பண்டைக்காலங்களினும் ஒவ்வொரு சமயநூற்குப் பல்வேறு விருத்த உரை செய்து தத்தம் உரையே சரியெனப் பாராட்டாநின்றார் பல்லோர். அவராலும் வேதாகமங்கள் ஆரிய மொழிக்கண் உள்ளனவேயாம் எனக் கொள்ளப்பட்டன. அவரும் தத்தம் கோட்பாட்டுக்குப் பிரமாணமாக அவ்வேதாகமங்களுள் ஒவ்வொரு பகுதியிலிருந்து பிரமாணம் எடுத்துக்காட்டினர். அப் பெரியாரும் வேதாகமங்கள் தமிழ்மொழிக்கண் உள்ளனவென்று அங்கீகரித்திலர். வியாச சூத்திரமாகிய வேதாந்த சூத்திரம் எம் மொழிக்கண் உள்ளது? வாய்மொழிக்குப் பஞ்சமா? அதுவும் தமிழ்மொழிக்கண் உள்ளது என்பர்போலும். அதற்குப் பிரமாணம்

என்னையெனவினவின் கடல்கொண்டுபோயது அக்கினிகொண்டு போயதுவாயுக்கொண்டுபோயது வானம்கொண்டுபோயது பிருதிவி கொண்டுபோயது பூகம்பம்கொண்டுபோயது வேற்றரையர்கொண்டு போயினர் என்று இத்தொடக்கத்தனவாக இறுப்பர்போலும். இங்ஙனம் இறுப்பின் எவ்வெச்சமயத்தாரும் எவ்வெப்பாஷைக்காரரும் வாதிகள் தத்தமதத்திலும் பாஷையிலும் வினு நிகழ்த்துழிப்பிரமாண வாயிலாக விடைகூற வியலாதபோது இவ்வாறே இறுத்துத் தத்தம் கொள்கைகளை நிறுவப்புகின் இவர்கதியாதாய் முடியும் என்பதைச் சற்றேற சிந்திப்பாராக.

இன்னும் பண்டையுகங்களினும் ஆன்மாக்களின் தீவினை வசத்தால் நூல்வரம் பழிந்தமையும் அதனுல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதத்தை உண்டாக்கி அந்தந்தமதப்படி ஒழுகினமையும் அது கண்ட பெருந்தேவராகிய பிரமவிஷ்ணுக்கள் வெள்ளியங்கிரியிற் கண்ணுதலை நண்ணி விண்ணப்பஞ் செய்து வேண்டிக்கொள்ள அவ்வேண்டு கோட்கிரங்கிக் கருணையங்கடலாகிய அக்கண்ணுதற் பெருமான் அவர் குறைதவிர்தற்கு வாயில் கூறி அநுக்கிரகஞ்செய்தமையும் பிறவும், "முந்தொரு காலத்தின்மூவுலகந்தன்னில், வந்திடு முயிர்செய்த வல்வினை யதனுலே, யந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச், சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றூர்" என்றற்றொடக்கத்துக் கந்தபுராணப்பாயிரச் செய்யுட்களானும் சித்தாந்த சாத்திரங்களானும் நன்கு அறியலாம்.

இங்ஙனம் இருந்தபடி அறிந்தயாம் கலியுகதருமம் நிறைவேறுதற்கு நம்மவர்செய்யும் பிறழ்ச்சிகளெல்லாம் துணைக்காரணம் என்பது வழியளவையின் வைத்துணர்ந்து, "வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாய அனைத்தாய நூலகத்து மில்லை" எனக்கண்ணி இவர் வினைப்பயன் இருந்தவாறிதுவோ வென்றெண்ணிக் கண்ணோட்ட முற்று நின்று இரங்குதலன்றி மற்றிவரால் எமது சமயத்திற்கும். சமயநூல்கட்கும் வருவதோரேதம் இல்லை யெனச் செம்மாந்து. களிப்பேம் என்றுணர்க.

விரிவுரை ஆசிரியர் முதலியோர் செய்யும் பிறழ்ச்சிகளெல்லாம் ஆராய்ச்சி ஆசிரியர் செய்யும் நன்மைகளெல்லாவற்றையும் யாவர்க்கும் காட்டாகக் காட்டி நிற்றலின் அவர் செய்கைகளும் பிறிதொரு பொருட்பெற்றி தேற்றுமாறுகண்டு களித்தாம்.

"மூவாநான்மறை" என்னுஞ்சொற்றொடராராய்ச்சியில் விஷய புஷ்டி ஒன்றையே அறிஞர் உற்றுநோக்கி உண்மைகடைப்பிடிக்குமாறு பன்முறை ஞாபகப்படுத்துகின்றேம்.

"அருளறி வொழுக்க மான மாசாரம் பொறைசீ ரன்பு,
தருமநன் னெறிநற் றூனஞ் சத்தியந் தவத்தோ டாண்மை,
விரதநோன் பிரக்க மீசன் மெய்யருட் பத்தி யுள்ளோ, ரொருவரை
யுலகிற் காண்ப தரிது கா ணுயர்த வத்தீர்"

எனத்திருவாரூர்ப்புராணத்துக் கலியுகச் சருக்கத்திற் கூறிய வண்ணம் சிவபக்தியுடையார் ஒருவரைத்தானும் உலகிற்காணமுடியாத இக்கலி வலிமிக்க காலத்தில் மூவாநான்மறைச் சொற்றொடராராய்ச்சி ஆசிரியர் சிவபக்தியுடையராய்ச் சிவ பூசை செய்து கொண்டு சைவ தூஷணபரிகாரமாகிய பல கண்டன நூல்கள் இயற்றிச் சைவர்களுக்கு இன்றியமையாத பேருபகாரியாக விளங்குதல் யாவர்க்கும் இறும்பூது பயவாநின்றது. இப்பேருபகாரிக்குச் சிவபெருமான் பூரணாயுசு கொடுத்து அரோகதிடகாத்திரராகவைத்துச் சைவசமயிகளுக்கு மேன்மேலும் பேருபகாரஞ் செய்விக்குமாறு அநுக்கிரகஞ் செய்யும் வண்ணம் அப்பெருமான் திருவடிகளைத் திரிவிதகரணங்களாலுஞ் சிந்தித்துத் துதித்து வந்திக்கின்றேம்.

சுவாமிநாதபண்டிதர்.

---

உ

கணபதி துணை.

---

# ஓம்படை.

பூமகள் பூத்த பொற்பமைந்த கடல் சூழ்ந்த இம்மண்ணுலகத்துப் பல்லாயிரம் பாஷைகளுளவேனும் உலகெலாம் நிறைந்து அகண்ட பரிபூரணராய் விளங்கும் முழுமுதற் கடவுளைத் தென்பாண்டி நாட்டில் மதுரைமா நகரில் "வெடி வாற் பைங்கட்குறு நரியினத் திளை—யேழிடந்தோன்றி யினனூற் கியைந்து—வீதி போக்கிய வாலுளைப் புரவி" ஆகச் செய்தது எம்மொழியோ, "மண்ணகழ்ந்தெடுத்து வருபுனல் வையைக்கூலஞ் சுமக்கக் கொற்றாளாகி, நரைத்தலை முதியோளிடித்தடு கூலி கொண் டடைப்பது போலவுடைப்பது நோக்கிக் கோமகனடிக்க அவ்வடிவாங்கி, யெவ்வுயிர் எவ்வுலகெத்துறைக்கெல்லாமவ்வடி" தழும்பாகக் கொடுக்கச் செய்தது எம்மொழியோ, பூசுரர் நான்மறைகளைமட்குட மொப்பெனக் கூறுமிழி சொல்லை மாற்றிக்கொள்ள அம்மறைகளே பொற்குடமாகி வெளிப்பட்டு விளங்கும் மொழி எம்மொழியோ, சிவலிங்கத்தினிடமுங் கல்லினுங் கமரினுந்தோற்றி மெய்யடியார்களது உண்மைத் தொண்டை உலகினர்க்குக் காட்டிய நம்பிரானது அருமைத் திருக்கரத்தால் வரையப்பட்டது எம்மொழியோ, புறப்புறச்சமயிகளெல்லாம் தத்தம் சமயத்தினர் இவ்வாறு இறைவனைப் புகழ்ந்தாரில்லையேயென ஏக்கமுற்றுத் தத்தம் மொழியில் மொழிபெயர்த்துக்கொள்ளப்பட்ட நூல் எம்மொழியோ, "பரித்த வுயிர் தன்னடியே வேண்டத், தருபரமற் கோர்வழுதி தன்னடிவாங்கித் தரு தமிழும்" என நற்கவிவாணரால் நன்கு புகழப்பட்டது எம்மொழியோ, அம்மொழியாகிய தென் மொழியில் திருவாசகமென்னும் பெயரால் வேதங்களை விரித்துத் தமிழ் மக்கட்கு உபகரித்தருளிய ஸ்ரீமங் மாணிக்கவாசக வள்ளலாரின் றிருவடித் தாமரைகட்கு இவ்வியாசத்தைச்சமர்ப்பணஞ் செய்கின்றேன்.

திருச்சிராப்பள்ளி<br>உருதிரோற்காரி ஆண்டு<br>வைகாசித்திங்கள் ௨௬ம் நாள்.

திரு. மா. சாம்பசிவன்.

சிவமயம்.

கணபதி துணை.

# திருவாதவூரடிகள் அருளிய திருவாசகத்தில் மூவாநான்மறை யென்ற சொற்றொடரின் பொருளாராய்ச்சி.

---

## காப்பு (ஆன்றோர்வாக்கு.)

வானுலகு மண்ணுலகும் வாழமறைவாழப்
பான்மைதருசெய்யதமிழ் பார்மிசைவிளங்க
ஞானமதவைந்துகர மூன்றுவிழிநால்வர
யானைமுகனைப் பரவியஞ்சலிசெய்கிற்பாம்.

ஆசையறாய்ப்பாசம் விடாயான சிவபூசைபண்ணாய்
நேசமுடனஞ்செழுத்தைநீ நினையாய்—சீ சீ
சினமேதவிராய் திருவாசகம்படியாய்
மனமேயுனக்கென்னவாய்.

---

## முதற் பாகம்.

---

ஸ்ரீமத் பல்லாவரம்சுவாமி வேதாசலமென்பார் தமிழ்மறையாகிய திருவாசகத்துக்கு விரிவுரையெனப் பெயரிட்டு ஓர் உரையெழுதி மாதாந்த சங்கியையாக வெளியிட்டுவருவது சைவசமயிகள்பலரும் அறிந்தவிடயமே. இதுகாறும் முதல்மூன்றகவல்களுக்கு உரைவெளி வந்திருப்பதில் ஆங்காங்குக்காணப்படும் திரிபுரைகளைமறுத்துப் பலர் துண்டுப்பத்திரிகைமூலமாயும் மாதப்பத்திரிகை மூலமாயும் எழுதி வருகின்றனர். அவர்களுள் நானும் ஒருவன். எனக்குப்புலப்பட்ட சங்கைகளைப்பல்லாவரம் சுவாமிகளுக்கேநேரில் எழுதினேன். சில வற்றை ஒப்பினார்கள். சிலவற்றிற்குத்தாம்கொண்ட கொள்கையை விடாமல் சமாதானம்போல ஏதேதோ எழுதிவருகின்றார்கள் "கோகழிப்பெயர் உண்மை" எனவோர் வியாசம்முன்னரே யெழுதி வைத்திருக்கின்றேன். இன்னும் அது வெளியாகவில்லை. நிற்க; கடைசியில் வெளிவந்த ௰௧-வது சங்கியையில் போற்றித்திருவகவில் நமது அடிகள் அருளிய "மூவாநான்மறை முதல்வா போற்றி'

எனுஞ்சுருதி வாக்கியத்திற்குத் திரிபானபொருள் காணப்படுகின்றது. "மூவாநான்மறை" எனுஞ்சொற்றொடருக்கு இருக்குமுதலிய நால்வேதமெனத் தொன்றுதொட்டுப்பொருள் வழங்கிவருதலை, உடன்பாடாகக்கொண்டு, அவ்வழக்கம் ஏலாமையெனும் கற்பனை கற்பித்துக்கொண்டு திரிபானபொருளை விளக்கியிருக்கின்றனர். அப்படி யெழுதியிருப்பதில் மறைகள்நிந்தனை,—சைவநிந்தனை,—சிவநிந்தனை,—அடியார்நிந்தனைகளாகிய மாபாதகங்கள் வெளிப்படையாயும் உள்ளுறையாயும் மலிந்துகிடக்கின்றன. இவைகளை என்மனம் பொறாது தூண்டுதலினால் திருவருள்கூட்டியவாறே, அதிப்பிரபல பிரமாணங்களைக்காட்டியே சிலஎழுதத்துணிந்துளேன். தமிழ்ப் புலமையோரும் வேதாந்த சித்தாந்த சைவஅநுபூதிமான்களும் தயைகூர்ந்து உண்மையைக் கடைப்பிடிக்கவேண்டுகின்றேன்.

"மூவாநான்மறை" என்றதன் பொருள் இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் எனவழங்கும் ஆரியமறைகளெனப் பொருள்கொள்வது ஏலாததுஎன்றும் மற்றதற்குத்திருவாதவூர் அடிகள்கொண்டபொருள் (க) தொல்காப்பியம் (உ) இறையனார் அகப்பொருள் (ந) திருக்குறள் (ச) தேவாரப்பாக்கள் சிவஞானபோதம் முதலியனவென்றும் எழுதியுள்ளார். அக்கூற்றுக்கு அவர்கள்கூறும் காரணமாவது "இந்நிலவுலகத்து மொழிகளுள் பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் இறவாது வழங்குவது தமிழ்மொழி ஒன்றே யல்லது பிற அன்மையானும் என்றும் உளனாகிய இறைவன்தன்போல் என்றும் உளதாகிய தமிழ்மொழிக்கணன்றி இடையேஇறந்துபட்ட ஆரியம் முதலான மொழிகளில் உண்மைநுண்பொருளை அறிவுறுத்தல் உயிர்கட்குப் பயன்படாமையின் அவன் அவற்றின்கண் அருளுதல் ஏலாமையானும், அறம்பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள் நான்கினையும் வகுத்துக்கூறுவன நான்மறையெனப்படுதற்குப்பொருத்தமாமன்றி, ஒருகாலத்து இருக்குஎன ஒன்றேயாயும், பின்ஒருகாலத்து அவ்இருக்கினின்றும் எடுத்துச்சில கூட்டி யசுர், சாமம் எனப்பிரித்துச்சேர்க்கப்பட்டு மூன்றேயாயும், ஏனை ஒருகாலத்து அம்மூன்றினின்றும் பிரித்தெடுத்துத்தொகுத்த அதர்வணம் எனஒன்று கூட்டப்பட்டு நான்கேயாயும் வெவ்வேறாய் வழங்கிய ஆரியமறைகளை நான்மறைகளெனத் தொன்றுதொட்டு வழங்குதல் ஏலாமையானும் அடிகள் ஈண்டுமூவாநான்மறையென்றருளிச்செய்தது மூத்தலில்லாது என்றும் இளமைச்செவ்வியோடு திகழுந்

தமிழ் நான்மறைகளேயாமென்க" எனப்பல்லாவரச்சுவாமிகள் எழுதியிருக்கின்றனர்.

மேற்காட்டியவற்றில் தமிழ்மொழியொன்றே யிறவாதுவழங்கும் மொழியெனவும், ஆரியம் இடையேயிறந்துபட்டதெனவும் சொல்லியிருக்கின்றனர். ஆரியம் இடையே இறந்துபட்டதென்றால் ஆரிய பாஷையா? அல்லது ஆரிய வேதமா? ஆரியபாஷையெனக்கொள்ளின், ஆரியபாஷை இன்றுகாறும் இருந்துகொண்டே அந்தணரோடு ஏனையோரும் பரதகண்டவாசிகளோடு மற்றைக் கண்டவாசிகளும் பயின்றுவரும்படி மேலும்மேலும் ஓங்கிவளர்ந்துவருவதைக் காண்கின்றோம்; ஆரிய நூல்களெனக்கொள்ளின் ஆதிநூலாகிய வேதம் முதலிய பதினெட்டுவித்தைகளும் இன்றுகாறும் நிலைபெற்றே விளக்கமாயிருக்கின்றன. பேசும் வழக்கிறந்தது ஆரியபாஷை எனக்கொண்டார்கள்போலும்; பேச்சுவழக்கில்லாவிடில் அதனால் குறையென்னை? தமிழ் முதனூலாகிய அகத்தியமெங்கே? இசைநூல், செயிற்றியம், குணநூல், பஞ்சமாபு, பஞ்சபாரதியம், எனும் நூல்களெங்கே? முதற்சங்கநூல்களெங்கே? கடைச்சங்கத்தார் இயற்றிய பாரதவெண்பா எனும்நூல் முற்றிலும் காணப்படுகின்றதா? தேவாரப்பதிகங்களாகிய தமிழ்மறை ஒரு இலக்கத்து மூவாயிரம் பதிகங்களில் இப்போதிருப்பவை எழுநூற்றுத்தொண்ணூற்றொன்று தானே. நூற்றில் ஒருகூறுமில்லையே. மீதியெங்கே? எல்லாம் இறந்துபட்டனவன்றோ? ஆகலால் இறைவன் திருவருள் கூட்டியபடி ஆன்மாக்கள் வினைகளுக்கீடாய் இந்நிகழ்ச்சிகள் நடைபெறும். செந்தமிழ்த்திருமுறைகளைச் சிதம்பர ஆலயத்துத்தேடிக்கண்டபோது அம்முறைகளை வன்மீகம்மூடி அநேகம்பதிகங்கள் இறந்திருந்ததைக்கண்ட திருமுறை கண்ட அபயகுலசேகர சோழமகாராசா துன்பக்கடலுட்பட்டபோது "மண்மூடச்செய்தது ஈண்டு வேண்டுவனவைத்தோமென்று" சிவபெருமான் திருவருளால் அசரீரி வாக்குண்டாயிற்றென்று திருமுறைகண்ட புராணத்தில் உமாபதிசிவம் அருளியிருக்கின்றதல்லவா? ஆரியபாடை கற்பது எளிதன்று. மிக்க கடினம். வேதசிவாகமசாஸ்திர இதிகாச புராணங்களாதிய நூல்கள் அளவிறந்தன. இக்கலியுகத்தில் ஆன்மாக்கள் தேகவலி குன்றி அறிவும் மழுங்கி வாணாளுங்குறைந்து அல்லற்படுவன. ஆதலால் ஆரியபாஷையைச் சமஷ்டியாய்ப்பேசுவது இனியது அன்றென முற்றுணர்வினனாகிய இறைவன் திருவுளம்பற்றினன்போலும். ஆரி

யம் இறந்துபட்டதென, ப. சுவாமிகள் கூசாது கூறினார்கள். ஆரியத்துக்கும் தமிழுக்கும் முதல் ஆசிரியர் நமது கடவுளாகிய சிவபெருமானல்லவா? அடியிற்காட்டும் சிலபிரமாணங்களைக் கவனிக்க வேண்டுகின்றேன்.

### திருமந்திரம்.

"ஆரிய முந்த மிழுமுடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே"
"தமிழ்ச் சொல் வட சொலெனு மிவையிரண்டும்
உணர்த்து மவனை உணரலுமாமே"

### சம்பந்தர் திருமுறை.

"தமிழ்ச் சொலும் வட சொலுந் தாணிழல்சேர"
"ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன றிகிலா அந்தகர்"
"தென் சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி
யெழில் நாம்பெடுத்துத்—துஞ்சு நெஞ்சிருள்
தூங்கத் தொழு தெழு தொல் புகலூர்."

### அப்பமூர்த்திகள்.

"ஆரியந் தமிழோடிசை யானவன்"
"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
"முத்த மிழும் நான்மறையு மானான் கண்டாய்"
"செந்தமிழோ டாரியனை"
"வடமொழியும் தென்றமிழும் மறைகளு
ன்கும் ஆயினான் காண்."

இவை முதலாகிய திராவிடத் திருமுறையின் பிரபல பிரமாணங்களாலேயே ஆரிய பாஷையும், தமிழ்ப்பாஷையும் ஒரே நீர் மைத்து எனவும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாட்சியில்லையெனவுங் காட்டப்பட்டது. ஆரியப்பயன், செந்தமிழ்ப்பயன் இவைகளை அறியாதவரை அந்தகர் என, நஞ்சம்பந்தப் பெருமான் இழித்துக் கூறியதையுங் காண்க. இதனால் ஆரிய பாஷையைக் குறை கூறுவோர் அப்பாஷையின் முதல் ஆசிரியாகிய சிவபெருமானையும் அப்பாஷையை யெடுத்துப்புகழும் சம்பந்தராதிகளாகிய சைவ சமயாசாரியர்களையுங் குறை கூறினவரேயாவர்.

இருக்கு முதலிய நான்கு வேதங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் வெவ்வேறு காலத்தில் உண்டானதென்று சொன்னார்கள். அப்படித்

தோன்றியதனுல் என்ன குறையோ. இவர் கூறும் தொல்காப்பியம், இறையனர் அகப்பொருள், திருக்குறள், தேவாரத் திருமுறைக ளாகியவெல்லாம் ஒரே காலத்திற் றோன்றினவா? ஒன்றின்பின் ஒன் ருகத்தானே வேறு வேறு காலத்தில் வெவ்வேறு ஆசிரியர்களால் உண்டாக்கப்பட்டவை. பல பல வாகக்கிடந்த வேதங்களை வேத வியாசர் நான்காக வகுத்தது ஒரே காலத்திற்றனே? அதுபோலவே தமிழ்த் திருமுறைகளையும் தமிழ்நாட்டு வியாசரெனப்படும் நம்பி யாண்டார் நம்பிகள் ஒரே காலத்தில் பதினெரு திருமுறைகளாக வகுத்தருளினர். அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் ஆரிய மறைகளில் கூறப்பட்டிருக்கின்றதென நம் பெருமக்கள் அருளியிருக்கின்றனர்.

"ஆலதன் கீழிருந்து நால்வர்க்கு அறம்பொருள் வீடு
இன்பம் ஆறங்கம் வேதந் தெரித்தானை"

"அறங்கிளரும் நால்வேதம் ஆலின் கீழிருந்தருளி" எனவும் போந்த தமிழ்ச் சுருதி வாக்கியமே இதற்குச் சான்றும். இப் பொழுது "வேதம்" எனுஞ் சொல் தமிழ் வேதத்தையா, ஆரிய வேதத்தையா குறிக்கின்றதென்பதைக் கவனிக்கவேண்டும்.

"இருக்கு ச்சுருதி மறை யெழுதாக்கிளவி,
ஆதிநூல் சாகை ஆரணம் வேதம்.

எனவும்,

"பௌடிகம் இருக்கு, முதல் வேதமாகும்
இரண்டாம் வேதம், யசு தைத்திரியம்
மூன்றது சாமவேதம் கீத நடை
நான்காம் வேதம் அதர்வணமென்ப"
"உபநிடதம் வேத த்தினுட் பொருளாகும்."

எனவும், பிங்கலந்தை நிகண்டு கூறுகின்றது. "இருக்கு, ஒத்து, ஆரணம்,வேதமென்ப" என ஒத்து என்ற மொழியும் வேதமா மெனச் சேந்தன் திவாகரமுங் கூறுகின்றது. இவைகளெல்லாம் ஆரியப் பனுவல்களே, நான்குவேதமென வரையறுக்கப்பட்டு விளங் குவதும் மேற்காட்டிய வேதங்களே. ஆகலால் "நான்மறை" எனத் திருவாதவூரடிகள் அருளியது ஆரிய மறைகள் நான்கினையுமே குறிக்கும். வேதம், ஆரணம் ஒத்து, மறை, சுருதி ஆதிய சொற்கள் எந்தத் தமிழ் நூல்களில் பிரயோகப்படுத்தியிருந்தாலும், தமிழ்,

திராவிடம் என்னும் அடைமொழி சேர்க்கப்படாதவரையிலும் முன் பின் சிறப்பு வகைக் குறிப்பு இல்லாதவரையும், ஆரிய வேதத்தையே குறிக்கும், மேற்காட்டிய பிரமாணங்களில் ஆறங்கமும் வேதத்தோடு சிவபிரான் அருளியதாகக் கூறப்படுகின்றது. ஆறங்கமாவன சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதியென்பன. சிட்சையாவது வேதத்தின் உச்சாரண லெட்சணத்தை உணர்த்துவதாம். வியாகரணமாவது வேதத்தின் பதலெடசணத்தை விரிப்பதாம். நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரங் கூறுவதாம். சோதிடமாவது இலக்கினம், திதி, வார நட்சத்திர முதலியவற்றால் வைதிக கருமங்களுக்குக் காலம் அறிவிப்பதாம். கற்பமாவது, ஆசுவலாயனீயம், போதாயனீயம், ஆபஸ்தம்பம் முதலிய சூத்திர ரூபத்திருந்து வைதீக கருமங்களின் முறையைக் கற்பிப்பதாம். சந்தோவிசிதியாவது வேதத்தில் உக்தை முதலிய சந்தோ பேதங்களுக்கு அட்சர சங்கியை கற்பிப்பதாம். இந்த ஆறங்கங்களும் வேதத்தின் உண்மைப் பொருளை யறிதற்கு இன்றியமையாதவை. ஆறங்கங்களையும் கற்றறிந்தாற்றான் வேதத்தின் நுண் பொருள் விளங்கும். அதனாற்றான் இந்நூல்களுக்கு வேதத்தின் அங்கமெனப் பெயருண்டாயிற்று. வேதத்தை அருளும்போதே ஆறு அங்கங்களையும் சிவபிரானே அருளியதாகத் தமிழ் மறை கூறுகின்றதும் இக்காரணம் பற்றியே. ஆறங்கங்களும் வேதம்போலவே வடமொழியிலுள்ளனவேயாம். இதற்குப்பிராமணந் தமிழ் மறையிற் பல காணலாம். சில வருமாறு "பலவேதம், அங்கமாறுமறை நான்கவையுமானார்."

"பங்கமில் பதினெட்டொடு நான்குக்குணர்வுமாய்
அங்கமாறுஞ் சொன்னானும் ஐயாறுடைய வடிகளே"
"நான் மறை யோடியல் ஆறங்கம் வல்லானை"
"முன்னொரு நான் மறை யாறங்கம் பழியாமை
பண்ணிசை யான பகர் வானை."

என்பனவாதியாம்.

இவை முதலாகிய காரணங்களினால் நான்மறை யென்பது ஆரிய வேதங்கள் நாலுமேயாம். ஏனெனில் தமிழ் மறை அடியில் விவரிக்குமாறு பன்னிரண்டாக ஆயிரம் வருடங்கட்கு முன்னரே வகுக்கப்பட்டிராநின்றதனால். திருமுறை கண்டபுராணம் என்பதுதான் மூவர் தேவாரப் பதிகங்களும் வெளிப்பட்டுப் பிரகாசமடைந்துவரும் சரித்திரங் கூறுகின்ற நூல். அப்புராணத்திலேயே தேவாரங்களுக்கு

எடுத்துக்கூறும் பிரதி பதங்களாவன, திருமுறை, அரியமுறை, தமிழ், செந்தமிழ், மூவர் தமிழ், வண்டமிழ், பாட்டல், மந்திரம், பதிகங்கள், முறைகள் என்பனவாம். மறையென்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கவில்லை. திருநெறித் தமிழில் மிக்க அன்பு பூண்டு இதுகாறுந் தோன்றிய சைவப்பெருமக்களில் ஒருவரும், திருமுறையை "மறை" யெனுந் தனித்த சொல்லால் அழைத்திருப்பாரையுங் காணேன். (ஏனெனில் இத்திருநெறித் தமிழ் யாருக்கும் மறைக்கப்பட்டதன்று. "மறைத்து உரைத்தலால் மறையெனப்படுமே" எனவும், அகத்தியனாருஞ் சூத்திரம் இயற்றினதாகச் சொல்லுவர்), சிறிது காட்டுகின்றேன். கண்ணுடைய வள்ளலார், "மறைப்புலவன்" என்று கூறி அடுத்த வாக்கியத்தில் "தமிழ்க் குரிசில்" எனச் சம்பந்தப் பெருமானைப் புகழ்ந்தார். நம்பியாண்டார் நம்பி "புரிபுன் சடையோன் திருவருள்பெற்ற இருபிறப்பாளன் முத்தீவேள்வி நான்மறை வளர, ஐவேள்வுயர்த்த, அறு தொழிலாளன் ஏழிசையரசை, எண்டிசை யறியத்துண்டப்படுத்த தண்டமிழ் விரகன் புனற்காழிச்சம்பந்தன் தன்மாலை ஞானத்தமிழ்" என்றும்,

"துன்றிய - பன்னு தமிழ்ப் பதினாறாயிரம் நற்பனுவல் மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்" என்றும்,

தாயுமானவர் "மூவர் சொலுந் தமிழ் கேட்குந் திருச்செவிக்கு" என்றும்,

வைராக்கிய சதகம். "உள்ளமே ஓதுமூதுணர்வோர் முற்பழிச்சு பாடலே"

சிவஞானதீபம். "அருந்தமிழின் செய்யுணீதி நலமுணரா வினையேனும்"

சிவப்பிரகாசர். "முக்கட்காரணன் உரையெனும் ஆரண மொழியோ, ஆதிசீர்பரவும் வாதவூர் அண்ணல், மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனே" எனவும் "மதுரவாசகம்" எனவும் நவின்றுளார்.

இப் பிரமாணங்கள் நம்மூர் வீரர்கள் ஒருவரும் மறை அல்லது நான்மறையெனத் தமிழ் வேதத்தைக் குறிப்பிட்டாரல்லர் என்பதைக் காட்டும். திருமுறை கண்டபுராணத்திற் கூறிய பிரதி மொழிகளையே பெரும்பாலுமெடுத்துப் பிரயோகப்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால் மூவர் தமிழும் திருவாசகமும் வேதத்தின் ஞானகாண்டப் பொருட்

களேயானதனுலும், வேதம். மறை என்ற பெயர் ஆரிய வேதத்தைக் குறிக்குமானதனுலும் மூவர் தமிழையும், திருவாசகத்தையும் தமிழ் மறை, தமிழ் வேதம், திராவிடவேதம் எழுதும் மறை என்பனவாதி யாக அடைமொழிகளோடு ஆன்ருேர் வழங்கி வருகின்றனர்.

மூவாநான்மறை என்றதனுல் மூத்தலில்லாது என்றும், இளமைச் செவ்வியோடு திகழ்வது தமிழ் நான்மறைகளேயென்று சு. வே அவர்கள் சொல்லுகின்றனர். தமிழில் உள்ள மறை நான்கு அல்ல. தமிழ்மறை பதினென்றெனத் தமிழ் நாட்டுவியாச முனிவர் என்னும் நம்பியாண்டார் நம்பிகள் தூ-வருடங்களுக்கு முன்னரே வகுத்தருளினர். ஆதலால் மூவா எனும்மொழி நான்குவேதங்களாய் வகுக்கப்பட்டிராநின்ற ஆரியவேதங்களுக்கே அடைமொழியாம். திரு வாதவூரடிகள் இவ்வகையான பிரயோகம் பல திருவாசகத்தில் அருளி யிருக்கின்றனர். "மிக்கமெய்ந்நூல் சொன்னவனே" "செப்பமா மறை" "தெருளும் நான்மறை" என்ற பிரயோகங்களில் மேலான சத்தியமானது வேதம். செவ்வையானது வேதம். அறிவைக் கொடுப்பது வேதம் எனச் சிறப்பித்திருக்கின்றனர். ஞானசம்பந்தப் பெருமானும் "மாருமறை நான்காய்" எனவும் "பொய்யாமறைபாடல் புரிந்தான்" எனவும் அருளியிருப்பதில் என்றும் மாருத, அதாவது அழியாதவேதம், சத்தியமானவேதம் என்னும் பொருளோடு விளங்கு வதையுங்காணலாம். இன்னமும்

"மன்னிய சீர்மறைநாவன் நின்றவூர்ப்பூசல்"

"நல்ல அருமறை"

"பழியிலா மறை" ஆதிய அநேக பிரயோகங்கள் தமிழ் வேதத்தில் மேற்கூறிய பொருளேப் பயந்து நிற்றலேப்பாரக்கக்காணலாம். நமது அப்பமூர்த்திகளும் "நாலாயமறைக்கிறைவனுயினுனை" என "நான்மறைமுதல்வா" என்றதுபோலவே அருளிபிருக்கின்றனர். நமது மூதன்னேயார் அருளிச்செய்த "தேவர் குறளும் திருநான் மறை முடிவும் மூவர் தமிழும்" எனுந் தொடக்கச் செய்யுளேச் சற்று ஆராய்வாம்—திருநான் மறையென்றது தமிழ் மறையையா? ஆரிய மறைகளேயா? மூவர் தமிழுமெனத் தமிழ் மறையைப் பிரித் துச் சொல்லியிருப்பதனுல் திருநான்மறையென்ற தொடர்மொழி ஆரியவேதம் நான்கே யெனத் தெற்றெனப்புலப்படும். இதில் அழ கியவெனப் பொருள்பயக்கும் திரு எனும் அடைமொழியை அம்மை

யார் சேர்த்திருப்பதனால் மூவா நான்மறை யென்றதுபோல எக்காலமும் அழியாத வெனும் பொருளையுங்கொடுக்கின்றது. நம் பல்லாவரம் சுவமிகள் இச்செய்யுள் ஒன்றக்குமே முனிமொழிப்பிரகாசிகை யென்று பெயரிட்டு ஓர் சிறியவியாசம் பூர்வத்தில் எழுதியுள்ளார். அக்காலம் இவ்வித விவாதத்தில் அவர்கள் இறங்கினாரில்லை போலும். அல்லது அவ்வெழுத்தை இக்காலம் மறதியாகிய கள்வன் கவர்ந்தான் போலும். இவை முதலாகிய காரணங்களாலே மூவா எனுமொழி அடைமொழியாகச் சேர்க்கப்பட்டதனாலே நான்மறை யென்றது தமிழ் நான் மறைகள் ஆகாவாம். தமிழ் மறை நான்காய் கூறப்படாது பதினொன்று பன்னிரெண்டு என்னும் பிரிவுடைத்தாதலால். இதைச் சிறிது விரிவாய்ச் சொல்லுகின்றேன். தமிழின் திருமுறைகளைப் பதினொன்றாக நம்பியாண்டார் நம்பி யெனும் தமிழ்நாட்டு வேதவியாசமுனிவர் அபயகுலசேகர் சோழமகாராஜன் முன்னிலையில் சிதம்பரம் நடேசப்பிரான் ஆக்ஞையின்படி எருக்கத்தம்புலியூர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிற் றோன்றிய பெண்மணியினால் தெரிக்கப்பட்டு இதுகாறும் வழங்கிவரும் தமிழ்ப்பண்ணடைவுகளுடன் நடேசர் சந்நிதியிலே வகுத்ததாகத் திருமுறைகண்டபுராணம் கூறா நின்றது. பின்னர் மேற்குறித்த பதினொன்றுடன் திருத்தொண்டர்புராணத்தையும் பனிரெண்டாம் முறையெனச் சேர்த்து அநபாயச் சோழமகாராஜன் முன்னிலையில் நடேசர் சந்நிதியில் திருமுறை (தமிழ் வேதம்) பனிரெண்டென வகுத்துச் செப்பேட்டிலெழுதுவித்து நடராஜர் சந்நிதியில் ஏற்றுவித்ததாகச் சேக்கிழார் புராணத்தில், உமாபதிசிவனார், திருவாய்மலர்ந்தருளினார். உமாபதிசிவனார் எத்தன்மையரெனில், ஆளுடையநம்பிகள் அருளிய திருத்தொண்டத் தொகையின் முதலடி "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்பது. இவ்வடியெடுத்துக்கொடுத்தது—திருவாரூர் தியாகராஜப்பெருமான். இவ்வாறு தியாகராஜப்பெருமான் வாக்கால் தில்லைவாழந்தணர் என அருளப்பட்ட அந்தணர் குலத்திற் றோன்றியவர். "பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுக்க முறை" யென நடேசப்பிரான் எழுதிய கைச்சீட்டுப்பெற்ற மகாசாம்பவான்—அவ்வாறே நயன தீட்சா மூலமாய் பெற்றான் சாம்பானுக்கு முத்தியளித்த சற்குரு—அக்காலம் அந்நாட்டையாண்ட அரசனுக்கு இவ்விஷயமாயுண்டான ஆசங்கையை நிவர்த்தி செய்யும் பொருட்டுப் பரிபக்குவப்பட்டிருந்த முள்ளிச்செடிக்கு நயனதீட்சை செய்து முத்தி கொடுத்த பரமகாருண்ய முனிவர்

—வேதாந்த சித்தாந்தமான தமிழ்ச் சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டுச்சாத்திரம் அருளிச்செய்த நான்காவது சந்தனாசாரியராய்ப் பிரகாசிப்பவர். இப்பெருஞ் சிவாநுபூதிச் செல்வர் தமிழ்மறை பன்னிரெண்டெனச் சுமார் எா ஆண்டுகளுக்கு முன்னரே கூறியருளினார். பன்னிரெண்டாக வகுத்த காலமோ அநபாயச்சோழமகாராஜர் காலம். இவ்வாறிருக்க இந்தக் கலி அப்தம் நிது உசல்—தமிழ்மறை நான்கு என நாட்ட நம் பல்லாவரம் சுவாமிகள் முயல்வாராயினர். இது கலியின் வன்மையே.

மூவா நான்மறை யென்றது, தமிழ் நான்மறை யெனப் பல்லாவரம் சுவாமிகள் தாம் கூறுதற்கு மற்றுமோர் காரணங் காட்டுவாராயினர். அஃதாவது "இறைவன் அருளிச் செய்த மறைகள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களை அறிவுறுத்து மென்பதூஉம், அப்பொருள்கள் அடங்கிய நாற்கூறான மறைகளை இறைவன் திருவால நீழற் கீழெழுந்தருளி அருந்தவத்தோர் நால்வர்க்கு அறிவுறுத் தருளினனென்பதூஉம்.

"ஆலநீழலன்றிருந்தற நெறி நால்வர் கேட்க நன்கினிதுரைத் தனை" என்று நக்கீரர் அருளிச்செய்த திருவெழு கூற்றிருக்கையினும்.

"அருந்தவருக்காலின் கீழ் அறமுதலா நான்கனையும் இருந்தவருக்கருளுமது எனக்கறிய வியம்பேடீ அருந்தவருக்கற முதலான் கன்றருளிச் செயதிலனேற் றிருந்தவர்க்குலகியற்கை தெரியாகாண் சாழலோ" என்று அடிகள் அருளிச் செய்த திருச்சாழலினும்

"அன்றாலின் கீழிருந்தறம் புரிந்த அருளாளர்"
என்று திருஞானசம்பந்தப் பெருமானும்,
"அன்றாலின கீழிருந்தறஞ் சொன்னானை"
என்று திருநாவுக்கரசு நாயனாரும்,

"அன்றாலின்னிழற் கீழ் அறம் நால்வர்க கருள் புரிந்து." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும் அருளிச் செய்த தேவாரத்தினும், இனிது தெளிக்கப்பட்டமை காண்க. சிவபெருமான் அறம் முதலாகிய நாற் பொருளடங்கிய நான்மறைகளைத் திருவால நீழற் கீழிருந்து அருந்தவர் நால்வர்க் கருளிச்செய்தன ரென்னும் இத்தொன்று தொட்ட வரலாறு ஆரிய வேத வரலாறுகளுள் ஓர் சிறிதுங்காணப் படாமையின் இது தமிழ் மறைகள் வந்தவரலாறே தெரிப்ப தென்பது நன்கு பெறப்படும்" எனவும், ஆதலால் மூவா நான்மறை யென்றால்

தமிழ் நான்மறைகளே யென்றும் கூறுகின்றனர். கல்லால நீழலி லிருந்து இறைவன் நாற்பொருளேயும் நால்வர்க்கருளினுன் என்பது மட்டும் மேற்காட்டிய பிரமாணங்களில் விளங்குகின்றது. இதனுல் இறைவன் சகளத்திருமேனி கொண்டு நான்கு தவசிகளுக்கு நாற் பொருளைச் சொன்னுரெனக் கொள்ளப்படும்—நால்வராவர் யாவர்—எக்காலம்—எவ்விடத்தில் இறைவன் இவ்வாறு அனுக்கிரகித்தனர்—நாற்பொருளேயும் கத்திய ரூபமாக இறைவன் சொற்றனரா? அல்லது ஒரு நூலைச்சொல்லி அந்நூலின் கண் அடங்கி நின்ற நாற் பொருளேயும் விரித்து உரைத்தனரா—என்பன—வாதிய வற்றைப் ப. சு. ஆராய புகவில்லை—தேவாரம் திருவாசகமாகிய தமிழ் மறையில் வேதத்தினுள்ள நாற் பொருள்களேயும் இறைவன் அவ் வேதங்களோடும் ஆறங்கத்தோடும் நால்வர்க்கு உணர்த்தினனென வெளிப்படையாக அருளியிருப்பதை ப—சுவாமிகள் எடுத்துக்காட்டாது விட்டனர். அவற்றினை ஈண்டு எழுதுகின்றேன்.

''நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை—யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி''

''அணிபெறு வடமர நிழலினிலமர்வொடு மடியிணையிருவர்கள்—பணிதர வறநெறி மறையொடுமருளிய பரமனதுறைவிடம்''

''அறங்கிளரும் நால்வேதம் ஆலின் கீழிருந்தருளி''

''எரிசையும் வடவாலின் கீழிருந்து அங்கு ஈரிருவர்க்கிரங்கி நின்று நேரிய நான்மறைப் பொருளை யுரைத்து ஒளிசேர் நெறி யளித்தோனின்ற கோயில்''

ஓதி யாரணமாய நுண்பொருளன்று நால்வர் முன் கேட்க நன் நெறி—நீதியால நீழலுரைக்கின்ற நீர்மையதென்''—

''பொய்யுரையா மறை நால்வர் விண்ணோர்க்கென்றும் வேதத்தை விரிப்பதற்கு முன்னே பின்னே''

''ஆலதன் கீழிருந்துநால்வர்க்கு அறம் பொருள் வீடு இன்பம் ஆறங்கம் வேதம் தெரித்தானை'' ''மறை நான்குங் கல்லானிழற் கீழ்ப்பன்னிய வெங்கள்பிரான்''

என்பனவாதிய தமிழ்மறைப் பிரமாணங்களினுல் நான்கு வேதங்களேயு மவ்வேதங்களின் புருஷார்த்தம் நான்கனையும் பொய்யுரையா மறை நால்வர்களுக்கு அருளியதாகத் தெற்றெனப்புலப்படும். மறை—வேதம் ஆரணம் ஆதியசொற்கள்-ஆரியமறைகளேயே உணர்த்துமென மேலே

விளக்கினேன்—ஆதலால் ஆரியமுனிவர் நால்வர்க்கு ஆரியவேதங்களாகிய நான்கையும் அவைகளில் அடங்கியிராநின்ற நாற்பொருள்களையும், ஆறு அங்கத்தோடு இறைவன் சகளீகரித்து உரைத்தனர் என நன்கு தெரிகின்றது— நால்வருக்கும் நான்மறைகளையும் அவற்றின் பொருளையும் சிவபிரான் அருளினாரென்று தமிழ்மறை நமக்கு அறிவித்ததோடு நில்லாமல் "பண்டு இருக்கு ஒரு நால்வர்க்கு நீருரை செய்ததே" (சம்பந்தர்-உ-ம் முறை திருவான்மியூர்பதிகம்) என எவரானும் எவ்வகையானும் மறுக்க முடியாதவிதமாக நால்வருக்கும் அருளிச் செய்தது ஆரியவேதமாகிய ருக்குவேதத்தையே யெனச் சம்பந்தப் பெருமான் தேற்ற ஏகாரங் கொடுத்துக் கூறினார்-ருக்கு என முதல் வேதத்தின் பெயரைக் கூறவே "ஒரு மொழியொழி தன்னினங் கொளற் குரிததே" என்றதனால் மற்றை மூன்றுவேதங்களுங் கூறப்பட்டன வென்பது தானே போதரும்—அன்றியும் தமிழ்ப்பனுவல்களாகிய தேவார திருவாசகங்களில் அவ்வற்றையருளிய சமயாசாரியர்களாகிய சம்பந்தராதியோர்மறை, வேதம், ஆரணம் இவற்றின் பொருட்களை அருளிச்செய்த இறைவன், என்று சொல்லியிருத்தலால் அத்தமிழ்ப்பனுவல்களுக்கு வேறாக—வேதம் ஆரணம் என்பன, அத்தமிழ்ப்பனுவல்கள் தோன்றுவதற்கு முன்னரே யிருந்திருந்தன வென்பதும் கரதலாமலகம்போலப் படுதல்தெற்றெனக் காண்க. கல்லாலநீழலிலிருந்து தபசிகள் நால்வர்க்கு இறைவன் வேதப் பொருளையருளிய தொன்றுதொட்டவரலாறு ஆரியவேதவரலாறுகளில் ஒருசிறிதுங்காணப்படவில்லையென்று பல்லாவரம் சுவாமிகள் எழுதினார்களே. தமிழ்த்திருமுறையில் குறிப்பாய்க் காட்டியதை எழுதினார்களே யொழிய விபரமாய்த் தமிழ் நூலில் எங்குச் சொல்லப்பட்டிருக்கிறதென்பதையும் ஆராய்ந்தார்கள் அல்லர்—இவ்வரலாற்றின் விவரம் யானறிந்தவரை வருமாறு—பிர்மதேவரின் மானச புத்திரர் நால்வர்—ஸனகர்-ஸநந்தரர்-ஸநாதரர்-ஸநர்க்குமாரர், என்பவர்கள்—இவர்கள் தோன்றியவுடனே சிருஷ்டித் தொழிலை ஆரம்பிக்கும்படி பிர்மதேவர் கற்பித்தார். இந்நால்வரோ தங்களுக்குச் சிருஷ்டித்தொழிலிற் பிரியமில்லை யென்றும், சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற்று முக்தியடைய விரும்புகிறோமென்றும் தெரிவித்துத் தங்கள் கருத்தை நிறைவேற்றத் தவம் புரிந்தனர்—இது மகமேரு பர்வதத்தில்—பார்வதி அம்மையார் விவாகத்துக்கு முன்னரும் தட்சப்பிரஜாபதியாகத்துக்குப் பின்னருமாம். அக்காலத்துப், பரமசிவம் தட்சணாமூர்த்

தமாயெழுந்தருளி இந்நால்வருக்கும் வேதப்பொருளை அறிவுறுத்தருளினர்—இதனால் சித்தம் ஒருப்படாதவராகிச் சிவஞானமடையாது மறுபடியும் இறைவனை நோக்கித் தவம் புரிந்தனர்—இரண்டாமுறையும்—வடவாலநிழலிலே தடசணாமூர்த்தமா யெழுந்தருளி இறைவன் சிவஞானபோதப் பொருளை இம்முனிவர்களுக்குச் சொல்லாமற் சொல்லி யறிவுறுத்தினர்—இச்சரித்திரந்தான் தமிழ்மறையில் ஆங்காங்குக் குறிப்பிடப் படுகின்றது—இச்சரித்திரத்தை வடமொழியசுர் வேதபாகமாகிய தட்சணாமூர்த்தியுபநிடதம், வியக்கின்றதெனத் தமிழ்த்திருமுறையையும் திராவிட மகாபாஷியத்தையும் மற்றும் பல செந்தமிழ் அருமைச் சைவ நூல்களையும், தன்னலங்கருதாது உலகினர்க்குபகாரமாக அச்சிட்டு வெளிப்படுத்தி உபகாரம் புரிந்துவரும் மிக்க சிவபுண்ணியத் தேர்ச்சியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

ஸ்காந்தமகாபுராணம்— சங்கரசங்கிதை சம்பவகாண்டம் ௯ வது அத்தியாயம் ௫௰௧ வது ஸ்லோகம் முதல் ௪ வது அத்தியாயம் ௨௰ வது ஸ்லோகம் வரை இச்சரித்திரங் கூறப்பட்டுளது—கச்சியப்ப சிவாசாரியர் மொழி பெயர்த்தருளிய தமிழ்க் கந்தபுராணத்தினும் இச்சரிததிரங் காணலாம். இஃது இவ்வாறிருக்க இறைவன் கல்லால நீழலிலிருந்து நால்வர்க்கருளியது ஆரியவேத வரலாறுகளுள் ஓர் சிறிதுங்காணப் படாமையின் "மூவாநான்மறை" யென்றது தமிழ் மறைகள் வந்த வரலாறே தெரிவிப்பதெனப்பல்லாவரம் சுவாமிகள் எழுதியிருப்பது மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. ஆரிய பாஷையை முற்றிலுங்கரை கண்ட உத்தமோத்தம சிவபக்தராகிய ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் இயற்றியருளிய தட்சணாமூர்த்தி அஷ்டகத்தில்—"சித்திரம் வடதரோர் மூலேவிருத்தா சிஷ்யாகுருர்யுவா குரோஸ்து மௌனம் வியாக்கியானம் சிஷ்யா ஸ்த்துச் சின்னஸம்ஸயா:"—என இறைவன் தட்சண மூர்த்தமாயிருந்து நால்வர்க்கு ஞானோபதேசம் மௌனமாயிருந்தே செய்தனர் என்று ஓர் ஸ்துதியுளது—ஆரியவேத புராணாதிகளில் இவ்வரலாறு வித்தாரமாய்ச் சொல்லி யிருப்பதைக் காலதேசவர்த்தமானங்களுடன் நன்கு காட்டினேன்—ஆதலால் ப. சுவாமிகள் கற்பனை வாய்மை பெற்றிலது மன்றி மூவாநான்மறை யெனத்திருவாதவூர் அடிகள் அருளியது ஆரிய நான்மறைகளையே தெரிவிப்பதெனப் பசு மரத்தாணிபோல உறுதிப்பட்டது. நிற்க திருவாதவூரர் புராணம் அடிகள் சரித்திரத்தை

விளக்குந் தமிழ்நூல்— இந்நூலில் அடிகளைக்குறிப்பிட்டவோர் அமையத்தில் "சுருதி செந்தமிழாக்கிய மொழியார்" எனச் சொல்லப்பட்டிருக்கின்றது—இதனால் அடிகள் அருளிய திருவாசகம் முற்றுமே சுருதியின் (வடமொழி) சாராம்ஸ மென வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது—வடமொழியில்—மணிவாசக தீபிகை யென்று சுமது ஸ்லோகங்களடங்கிய ஓர் பெருநூல் அடிகள் சரித்திரத்தைக் குறித்து எழுதப்பட்டு இருக்கின்றது—இதையியற்றியோர் சிறந்த வடமொழிப் பண்டிதராகிய கடகர்ப்பார் என்போர். அம்மகான் அந்நூலில் எழுதியிருப்பதாவது—

"பக்தாமிர்தம் விச்வ ஜநாநு மோதனம் சர்வார்த்தம் ஸ்ரீ
மணிவாசக வாங்மயம்—ஸகஸ்ரசாகோப நிஷத்சமாகமம்
நமாமி அகம்திராவிட வேதசாரம்."

இதன் கருத்து மணிவாசகப் பிரபு அருளிய திருவாசக மெனும் பனுவல் பக்தர்களுக்கு அமிர்தம். சர்வஜனங்களாலும் ஆதரிக்கப்பட்டது, எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது ஆயிரம் சாகைகளையுடைய வேத உபநிஷத் சாரமாயுள்ளது அப்பனுவலை நான் நமஸ்கரிக்கின்றேன் என்பதாம்—இவ்வாறிருக்கையில் மூவாநான்மறை யென்ற அடிகள்வாக்கு ஆரியவேதங்களைக் குறிக்காது தமிழ் நூல்களையா குறிக்கும்? நடுவு நிலைமையுள்ள சான்றோர்கள் தான் இதற்கு முடிபு சொல்லவேண்டும். திருவாதவூர் அடிகள் தாமருளிய திருவாசகத்தில் பலமுறை வேதங்களையும் வேதியர்களையும் புகழ்ந்து கூறியுள்ளார்—சிலவற்றை அடியிற் காட்டுகின்றேன்—

"நந்தம் பாடியினான் மறை யோனாய்
அந்தமில் ஆரியனாயமர்ந்தருளியும்"

இதில் நான்மறையோன் என்றது எக்குலத்தாரை? முதல்வருணத்தாரை யல்லவா? எதனாலெனின் முதல் வருணத்தராகிய அந்தணர்க்கு நான்கு வேதங்களு முரித்தாதலினால் எனத்தெளிக, அப்பமூர்திகளும் "அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்" என அருளினார்கள்.

"வேதப் பொருள் பாடி"
"பாடுவன நால்வேதம்"
"ஆயநான்மறை யவனு நீயேயாதலறிந்து"

(இவற்றிலும் அந்தணர் உருவந்தாங்கி வந்த தமது குருமூர்த்தியை நான்மறையவன் என்று அடிகள் கூறிற்று)—

"மறைபயில் அந்தணனுய்"

"பேசுவதும் திருவாயால் மறைபோலும்"

"மன்னுகலை துன்னு பொருள் மறை நான்கே வான்சரடா"— என்பதாதியன—

இவ்வாறு அருளிய அடிகள் "இருக்கொடு தோத்திரமியம்பினர் ஒருபால்" என ஆரியவேதத்தின் பெயரையே பலரும் நன்குணரும் பொருட்டு எடுத்துஆண்டிருக்கின்றது—திருவாதவூர் அடிகள் அருளிய திருக்கோவையாரில் சோதிடங் கேட்டல், வேதியரை வினுதல் எனும் இரண்டு துறைகளுள களவுப் புணர்ச்சியின்கண் நாயகனேடு சென்ற தலைவியைத் தாய்தேடி வருகையில் எதிர்பட்ட சோதிடரையும் வேதியரையும் வினுயபோது, அச்சோதிடரைக் குறிக்குங்கால் "நான்மறை உத்தமரே" என்றும் "வேதியரைக்குறிக்குங்கால்" "கொண்மூ—அதிரேய் மறையினிவ்வாறு செல்வீர்" எனவும் அருளியிருப்பதில் "மறை" யென்னும்பதம் வேதியர்க்குரித்தாகிய ஆரிய வேதத்தையே குறிக்கின்றது.—நிற்க,

"தமிழ்மறைகளுட் காணப்படும் அரும் பெரும் நுண்பொருட் பெற்றி ஆரியவேதங்களுள் ஒரு சிறிதுங்காணப்படாமை எளிது விளங்குமாகலின், இவற்ருேடொப்ப அவைகளும் இறைவனருளாற் பிறந்தனவென்ருல் பொருளில் புன்மொழியாம்" எனப் பல்லாவரம் சுவாமிகள் எழுதியிருக்கின்றனர். திருவாசகமென்னுந் தமிழ் வேதம் முற்றுமே ஆரிய மறையின் பொருளே யெனப் பெருமக்கள் கூறியிருப்பதை மேலே காட்டினேன்.—இன்னுஞ் சிறிது ஆராய்வாம்— திருவாதவூர் அடிகள் திருவாசகத் தொடக்கத்தில் "நமச்சிவாய வாழ்க" எனப்பஞ்சாட்சரததை ஒதிப்போற்றுதல் செய்தது. —இப்பஞ்சாட்சர மகாமந்திரம் எங்கே கூறியுளது? தொல்காப்பியத்திலா? அகப்பொருளிலா? அல்லது திருக்குறளிலா? பல்லாவரம் சுவாமிகள் தான் தயைசெய்து கூறவேண்டும். மும்மறைகளுள் நடுமறையாகிய யசுர்வேத் மத்தியில் அல்லவா இம்மகா மந்திரம் மிக்கப் பிரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கின்றது. சித்தாந்த சைவத்துக்கு இம்மந்திரந்தான் ஆதாரம்—இம்மந்திர மில்லாவிடின் சைவமென்னுஞ் சமயமில்லை.

"வேதநான்கினும் மெய்ப்பொருளாவது நாதன்நாமம் நமச்சிவாயவே" எனவும்.

"நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

எனவுந் தமிழ்வேதமுங்கூறும்—

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்"

எனவும்

"அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை"

எனவும், திருவாதவூர் அடிகளும் திருவாசகத்தில் பன்முறை கூறுகின்றனர்—

எமதுநண்பர் பல்லாவரம் சுவாமிகளும் இம்மகாமந்திரம் ஆரிய வேதத்திலுள்ள தென்பதைத் துலக்கிமிக்க தெளிவாயும் அருமையாயும் முதலாவது சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்கள். பரமேஸ்வரனுடைய சகள நிஷ்களவடிவங்களை ஆரிய வேதங்களின் ஞானகாண்டம் கூறவில்லையா? சைவத்துக்கு இன்றியமையாத பஞ்சப்பிரமமந்திரம், ஷடங்கம், பதமந்திரம், ஸ்ரீமகாருத்திரம் முதலிய மகாமந்திரங்களெல்லாம் எங்குக்கூறப்பட்டிருக்கின்றன, தத்வமசி முதலிய மகாவாக்கியங்கள் எங்குக்காணப்படுகின்றன—விபூதி உருத்திராக்ஷம் எங்குக்கூறியுள்ளன—தகரவித்தை எந்நூலில் விவரித்திருக்கிறது—இருக்கு—யஜுர்—ஸாமவேதங்கள். நரசிங்கதாபினி—உருத்திராட்ச சாபாலம், பஸ்பசாபாலம்—தரிசனம்—நாராயணம்—தைத்தீரியம்—நாராயணவல்லி—பஞ்சப்பிரமம்—காலாக்கினிருத்திரம்—சாந்தோக்கியம்—கைவல்லியம் முதலிய (ஆரிய) வேதாந்த உபநிஷத்துக்களில் அல்லவா கூறுவதாகப்பெரியோர் சொல்லுகின்றார்கள்—சிவபிரான் அருளிய ஆரியவேதங்களின் பெருமையைச் சொல்லயாரால் முடியும்—ஆனால் ஆரியவேதம் பொதுநூல்—அதாவது அது உலகினர்க்கும் ஞானதிகாரிகட்கும் இயற்றப்பட்டது—ஞானகாண்டமும் அதில் உளவாகலின்—தமிழ்வேதமோ, சமஸ்கிருதவேதசிவாகம வழித்தாய்ப்பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவபெருமான் ஒருவரே முழுமுதற்கடவுள் எனவிளக்குவது—அதனால் சிறப்புநூலாகும்:—சிவஞானசித்தியாரில் "வேதநூல் சைவநூலென்றிரண்டேநூல்கள்" எனும் அரிய செய்யுளைப் படித்துப்பார்க்க வேண்டுகின்றேன்—தொல்காப்பியம், அகப்பொருள், திருக்குறள் முதலிய நூல்களில் சிவவென்னும்மொழி எந்தமூலையிலாவதுண்டா? இல்லையே இல்லை—இவ்

விஷயம் விரிக்கிற்பெருகும்—அறுபான்மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய உருத்திர பசுபதிநாயனூர். ஆரியவேதத்திலுள்ள ஸ்ரீ மகா ருத்திரத்தை சதா ஓதியே முத்தியடைந்ததாகத் திருத்தொண்டர் புராணம் கூறுநின்றது—ஆரியவேதத்தைக்குறை கூறியதனுல் ஆரிய வேதப்பொருளைப் பயின்று முத்தியடைந்த உண்மையடியாரையும் அவ்வாறு முத்திகொடுத்த சிவபெருமானையும் குறை கூறினதாக வல்லவாமுடியும். இனிச்சம்பந்தராதிகள் அருளிய தேவாரமும் ஆரிய வேதத்தின் சாரமேயென்பதை அவர்களாலும் ஆன்றோர்களாலும் கூறப்பட்டிருப்பதை யெடுத்துக் காட்டுகின்றேன்.

---

## இரண்டாம் பாகம்.

---

(க) "காழித்தமிழ் ஞானசம்பந்தன் * *
மறையிங்லகுதமிழ் வல்லார் வானுலகத்திருப்பாரே"

(உ) "வித்தகமறைமலி தமிழ் விரகன்மொழி" எனவும்

(ங) காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்—மறைவளருந் தமிழ் மாலைவல்லார்'—எனவும், சம்பந்தப்பெருமான் தாமருளிய தேவாரப் பதிகங்களில் அருளியிருப்பதே ஆரியவேதமே, தமிழ்வேதத்தில் நிலைபெற்றுலாவுகின்ற தெனப்போந்தது—சேக்கிழார் பெருமானும் "இருக்கு மொழிப்பிள்ளையார்" எனவும் "மெய்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை" * * "கவுணியர் கோன்பாடுங்காலை" எனவம் "விருப்புடன் பாடலிசைத்தார் வேதந்தமிழால் விரித்தார் "எனவும், பெரியபுராணத்தில் அருளியிருக்கின்றார்—நம்பியாண்டார நம்பிகளும் "பன்மறையோர் செய்தொழிலும் பரம சிவாகமவிதியும்—நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே" எனவும, திருவாய்மலர்ந்தார்—உமாபதிசிவனுரோ "வேதியர் வேதமுழக் கொலிவேதத்தைத் தமிழால், ஓதியமூவர்திருப்பதிகத் தொலி" எனவும் "தேவருமெழுதவொணு மறையைத் தமிழ்ச்செய்து திருப்பதிகம் பாடும்மூவரும்" எனவும், சேக்கிழார் புராணத்தில் எவ்வித ஆசங்கைக்கும் இடமின்றி மிகத்தெளிவாகக்கூறுநிற்பர். மற்றும் சிவானுபூதிமான்களாகிய அருணகிரியார் ஆதியோர்களும் இவ்வாறே ஒரேமொழியாக அருளியிருக்கின்றார்கள். இவை முதலிய அதிப்பிரபல பிமாணங்களினல் வேத உபநிஷத்து உண்மைப்

பொருள்களையே சம்பந்தப் பெருமானும் மற்றை இருவரும் அவர்கள் அருளிய தேவாரங்களில் (மணிவாசகப் பிரபு திருவாசகத்தில் அருளியது போலவே) அருளிச் செய்தனர்களென்பதேவாய்மை—இதனைற்றான் "திருநான்மறை முடிவும், மூவர்தமிழும் முனிமொழியும், கோவை திருவாசகமும் திருமூலர்சொல்லும், ஒருவாசகமென்றுணர்" என நம்மூதன்னையார் வாக்கும் போந்தது—திருவாதவூரடிகள் தாமருளிய திருவாசகத்தின் தொடக்கத்திலேயே வேதத்தின் உண்மைப்பொருளாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை "நமச்சிவாய வாழ்க" என்று சிறப்பித்துக் கூறியவாறு போல நம்சம்பந்தப் பெருமானும் தேவாரம்பாட ஆரம்பித்து, முதற்கண்ணேகூறினதேவாரப் பதிகத்தின் முதற்பாசுரத்தில்—தோடு—என ஆரம்பித்தது. "தோ"என்னுமெழுத்து, ஓ + த், என்னும் ஈர் எழுத்துக் கூடியது. வேதத்திற்கு ஆதியிலும் அந்தத்திலும் பிரணவத்தை உச்சரித்து வருவதற்கு அறிகுறியாய் ஓ வென்ற எழுத்தைத் தாம்பாடும் தமிழ் வேதத்தில் முதலில் வைத்தும் வேதத்தின் உள்ளீடாகிய தகர வித்தையைத் தாம் பாடும் தமிழ் வேதத்திலும், விரித்துக் கூறுவதற்கு அறிகுறியாக - த் - எனுமெழுத்தையுஞ் சேர்த்தும் இவ்வாறாகத்தோ என்னும் மெழுத்துடையமொழியை முதற்கண் வைத்து முதற்றேவாரப்பதிகம் பாட ஆரம்பித்தனரெனச்சான்றோர் பகர்கின்றார்கள்

இனிச் சம்பந்தப் பெருமான் முதலிய மூவரும் அவர்கள் அருளிய தேவாரப் பதிகங்களில் வேதம்– ஆறு அங்கம்– பதினெண் புராண முதலிய பதினெட்டு வித்தை களைப் புகழ்ந்து அவைகள் சிவபெருமான் வாக்கென்றே அருளியிருப்பவைகளில் சிலவற்றை அடியில் காட்டுகின்றேன். அவ்வாறு காட்டுவதற்கு முன்னர் பதினெண் வித்தையும் சிவபெருமான் வாக்கென்று வேதாதிகளில் கூறியிருப்பதாகப் பெருமக்கள் எழுதியிருப்பவைகளில் சில எழுதுகின்றேன்.

"வேதாந்தேபரமம் குஹ்யம் புராகல்பப்ரசோதிதம்"

[யசுர்வேதவசனம்]

"அஸ்யமஹதொபூதஸ்யநி: ஷ்வஸிதமேத்தய
திருகவேதோயஜுர்வேதஸ்ஸாமவேதோ
தர்வாங்கிரஸ இதிஹாஸ: புராணம் வித்யா
உபநிஷத:"

(பிருகதாரணியம்)

"ஈஸாநஸ்ஸர்வ வித்யாநாம்" (மகாநாராயணஉபநிடதம்)

"அஷ்டாதஸா நாமேதா ஸாம் வித்தியாநாம் பிந்நவர்த மாநாம் — ஆதிகர்த்தாஸிவஸ்ஸா க்ஷாச்சூல பாணிரிதி சுருதி: (வாயுசம்மிதை)

இந்த அதிப்பிரபல பிரமாணங்களால் இருக்குமுதலிய பதினெண் வித்தைகளும் சிவபரஞ்சுடர் வாக்கென நாட்டப்பட்டிருக்கின்றது—

சம்பந்த மூர்த்திகள் திருமுறை—

"மறைகலந்த வொலிபாடலோராடலராகி"

"அங்கமும் வேதமும் ஓது நாவர்"

"மந்திர வேதங்களோது நாவர்"

"பாடல் மறை வல்லான்"

"பண்ணார் மறை பாடப் பரமன் வேத முதல்வன்'

"மறையுடையாய்"

"பண்ணினார் மறை பாடலனுடையன்"

"பலவேதமங்கமாறு மறை நான்கவையுமானார்"

"பொய்யா மறை பாடல்புரிந்தான்"

"ஆறுபதமும் ஐந்தமர்கல்வியும் மறை முதல் நான்கும் மூன்றுகாலமுந்தோன்ற நின்றனை—"

"வேதர் வேதமெல்லாம் முறையால் விரித்தோத நின்ற வொருவனார்"

"மறையு மோதுவர்"

"பங்கமில் பதினெட்டொடு நான்குக்குணர்வுமா—யங்க மாறுஞ் சொன்னனுமையாறுடையவடிகளே."

"நான்மறை யோடாறங்கம் வல்லானை"

முன்னொருநான்மறையாறங்கம்—பழியாமை பண்ணிசையான பகர்வானை"

"பண்ணமரும் நான்மறையே பாடியாடல்பயில்கின்றீர்"

"சுருதிமறைநான்கான செம்மைதருவானை"

"சாகையாயிர முடையார் சாமமு மோதுவதுடையார்'

"பாடினையருமறை"

"சாமநல்வேதனுந்தக்கன்றன் வேள்விதகர்த்தானும்"

"தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்"

இதில் மறையையும் ஆறங்கத்தையும் தொகையாய்ச்சொல்லி ஆகமங்களை வகையாகச் செய்தாரெனவும் விளங்குவதைக் கவனிக்க வேண்டும்.

"பூதம் முதல்வன் முதலே முதலாப் பொலிந்த—சூதன் ஒலிமாலையென்றே கலிக்கோவை சொல்லே"—

"பாடல்மறை சூடல்மதி"

"ஆனபாடலுகந்தது நக்கையே"

"ஓதிவாயதும்மறைகளே"

"மெய்ப்பயின்றவர் இருக்கையே"

"வேதநான்கும் பதினெட்டொடாறும் விரித்தார்க்கிடங்கே தாரமே"

அப்பமூர்த்திகள்

"பாடினார் மறைநான்கும்"

"வேதியர் வேதமும் வேள்வியுமாவன ஐயாறனடித்தலமே'

"அரியநான்மறையோதிய நாவரோ"

"அரியநான்மறையாறங்கமாயைந்துபுரியன்"

"நான்மறைகள் பாடினானை"

"நல்ல நான்மறையோதியநம்பனை"

"மன்னுருவாய மாமறைகளோதினான்காண்"

"சந்தோக சாமமோதும்வாயானை"

"விரித்தானை நான்மறையோடங்கமாறும்"

"ஓதாதேவேதமுணர்ந்தாய்போற்றி"

"மறையுடையவேதம் விரித்தாய்போற்றி"

"மறைகொணுவா"

சுந்தர மூர்த்திகள்

"மறையோதீ"

"பன்னுன்மறைபாடுதிர்"

"விரித்த வேத மோத வல்லார்"

"மறைநான்கும் விரித்துகந்தீர்."

"சாம வேதனை"

"சொற் பொருளாய்ச்சுருங்கா மறை நான்கினை யுமோதியன்"—

திருமாளிகைத்தேவர்

"சாமகண்டா அண்டவாணா"

என்பதாதிய இவை போன்ற பல பிரமாணங்களுள. மூவர் பாடலில் வேத மாதிய (அவ்வேதத்தின் பெயரையுஞ்சொல்லி) பதினெண் வித்தைகளும் சிவபெருமானால் உண்டாக்கப் பட்டவை யென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபோல் திருவாசகத்தி லுள்ளவைகளை மேலே முதற் பாகத்திற் காட்டியுள்ளேன். இன்ன மும் திருவிசைப்பா முதலிய பனிரெண்டு திருமுறைகளிலும் அளவற்ற ஆதாரமுண்டு. அவைகளை யெல்லாம் எழுதப்புகுவது மேலே காட்டிய பிரமாணங்களையே மீண்டும் எழுதுவதாகும். ஆதலால் இத்தோடே நிறுத்துகின்றேன்.

இவ்வாறு வேதம் ஆதியநூல்கள் சிவபெருமான் வாக்கே யென்று மலையிலக்காகப் பிரபல உத்தம பிரமாணங்களில் தெரிந் திருக்கவும் இப்படிச் சொல்லி யிருப்பதெல்லாம் முகமன் என்று நம் பல்லாவரம் சுவாமிகள் எழுதியிருக்கின்றார்கள். முகமன் என்றால் முகத்துதி யென்று ஆகின்றது. முகத்துதி யென்றால் ஒரு வருக்கு உண்மையில் இல்லாத ஒரு விடயத்தை அவருக்கு இருப்பது போலக் கற்பிப்பது. முடிவில் அது பொய்யேயாம். இந்த நியாயத் தாலே நம் சம்பந்தர் ஆதிய பெருமக்களும் பொய்புகன்றனரெனவே கொள்ளவரும். முடிவில் அவர்கள் அருளிய தமிழ் வேதமும் பொய் யெனல் ஆகும். இவ்வாறு நினைத்தாலும் அந்த மகாபாதகத்திற்கு இருபத்தெட்டுக்கோடி நரக தண்டனையும் போதாவாம். இவ்வாறு சிவாகமம் கூறுகின்றது. எங்கூற்றன்று.

சிவதருமோத்தரம்.

ஒப்பிலிய நாதிமூத்தனோதிய வேதமாதிக்கு
ஒப்புயர் வுரைபபோர் நிந்தை யுரைப்பவர் உன்னுவாரும்
வெப்பெரி நிரயம் வீழ்ந்து வெந்துருகி வீயார்
எப்பொழுதேறுவா மென்று இளைத்து இளைத்து ஏங்குவாரே.

நிற்க, ஞானசம்பந்தர் ஆதிய சைவ சமயாச்சாரியர் மூவரும் தங்களை வேதம் நான்குடன் ஆறங்கமும் உணர்ந்தோரெனவும் அவ்வேத நெறியில் தாங்கள் நின்றோரெனவும், அவர்கள் பாடிய தமிழ்மறை யில் அருளியிருக்கின்றார்கள். அவைகளிற் சில வருமாறு—

சம்பந்தர்

"அரு நெறிய மறை வல்லமுனி"

"நண்ணிய கீர்த்தி நலங்கொள் கேள்வி நான்மறை
ஞான சம்பந்தன் சொன்ன பண்ணியல் பாடல்."

"புகலிந்நகர் மறை ஞானசம்பந்தன் உரை செய்த
"நிகரில்லன தமிழ் மாலைகள்"

"நாமலிந் தோங்கும் நான்மறை ஞான சம்பந்தன்
செந்தமிழ் வல்லார்."

"அங்கம் நீண்டமறைகள்வல்ல அணிகொள் சம்பந்தன்"

"மறை சேர்வருங்கலை ஞானசம்பந்தன்"

"எழில் மறை தன்னியல் கலைவல் தமிழ்விரகன்"

"புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்பந்தன்
தமிழ் கொடு"

"மன்னிய சீர்மறை நாவன் வளர்ஞானசம்பந்தன்
மருவு பாடல்"

"ஆய்ந்த நான்மறை ஞானசம்பந்தன்"

"மாமறை நான்கினோடு ஆறங்கம் ஆறும் வல்லவன்
வாய்மையினால் நாமருகேள்வி நலந்திகழு ஞான
சம்பந்தன் சொன்ன—பாமருபாடல்"

அப்ப மூர்த்திகள்

"தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியினந்நீர்
கொண்டிருக்கோதி யாட்டிக்குங்கு மக்குழம்பு சாத்தி—
இண்டைகொண்டேறநோக்கி யீசனை யெம்பிரானைக்—
கண்டனைக்கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே"

சுந்தரமூர்த்திகள்

"நாளும், ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறை
யங்கமோதியநாவன்—சீலந்தான்பெரிதும்
மிகவல்ல சிறுவன் வன்றொண்டன்ஊரன்
உரைத்தபாடல்பத்திவைவல்லார்".

மேற்காட்டிய தமிழ் மறைகளின் பிரமாணங்களாலே ஞான சம்பந்தர் ஆதிய மூவரும் ஆரிய வேதங்களை நன்குணர்ந்து அவ்வழி யொழுகினவரெனவும், அப்பெற்றியுடைய பெருமக்களாகிய அவர்கள் தமிழ் வேதத்தை அருளிச் செய்தார்களெனவும், நன்கு

விளங்கும். இதனல் ஆரியவேதங்களும் உபநிடதங்களும் தமிழ் வேதங்களும் சமத்துவமேயெனச் சான்ருேர் துணிவர். இங்ஙன மிருக்க நம்பல்லாவரம் சுவாமிகள் “ தமிழ் மறைகள் அவ்வாரிய நூல் களோடு ஒப்பவைத் தெண்ணப்படுஞ் சிறுமை யுடையவாகாது ” என்றும் “ ஆரியவேதங்கள் மூத்து விளியும் மக்களாலியற்றப்பட்டுத் தம்மையுடைய ஆரியமொழி மூப்புற்று இறந்து பட்டவாறே தாமும் மூத்து விளிந்து அதுபோலாகாமல்” என்றும், மேலே காட்டிய சுந்தரமூர்த்திகள் தேவாரத்தில் “நாளும் ஞாலந்தான் பரவப்படுகின்ற **நான்மறை யங்கம்.”** என்று அருளியிருக்கும் தன்மையைச் சற்றும் எண்ணமல் தம்மனம் போனவாறெல்லாம் வேதாதிகளைக் குறை சொல்லி யெழுதியிருக்கின்ருர்கள். இதனலும் வேதாதிகளை முற்றுமுணர்ந்த சம்பந்தாதி சைவ சமயாச்சாரியர்களையும் அவர்கள் பாடிய ஆரிய வேதமே யென்னுந் தமிழ் வேதத்தையும் இகழ்ச்சி செய்தவாருயிற்று. மறைகள் நிந்தனை சைவ நிந்தனை யிவற்றைவிட வேறு யாவை? சான்ருேர்களே ! சைவப்பெருமக்களே ! கூறுங்கள். கூறுங்கள். நிற்க, சம்பந்தாதிகள் சிவஸ்தலங்களைத் தெரிசிக்குங்கால் முதல் வருணத்தாராகிய அந்தணர்கள் விசேடமாய் வசிக்குந் தலங்களைத் தெரிசித்து அத்தலங்களுக்குத் தேவாரம் பாடும்போது அவ்வந்தணர்கள் வேதவேதாங்க விற்பன்னர்களாயும், வேதநெறி தவருதவர்களாயும், வேதத்தில் விதித்த யாகாதி கிர்த்தியங்கள் செய் பவர்களாயுஞ் சிறப்புற்ருேங்கி விளங்குவதைக் கண்டு அவர்களைச் சிறப்பித்து அந்தந்த தலத் தேவாரங்களில் கூறியிருக்கும் பாகம் அநந்தம். அவைகளிற் சில வருமாறு.—

### ஞானசம்பந்தர்.

“ ஒருங்கிய மனத்தோடு இருபிறப்போர்ந்து முப்பொழுது
குறை முடித்து நான்மறையோதி ஐவகை
வேள்வியமைத்து ஆறங்க முதலெழுத்தோதி வரன்
முறை பயின்றெழுவான்றனை வளர்க்கும் பிரமபுரம் பேணினே.’
“ அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர்நாளும் அடிபரவ’
‘நாமருகேள்வியர் வேள்வியோவா நான்மறை யோர்வழி
பாடுசெய்ய”
“மணந்திகழ் திசைகளெட்டும் ஏழிசையும் மலியும் ஆறங்கம்
ஐவேள்வி, யிணைந்தநால் வேதம் மூன்றெரி யிரண்டு பிறப்பென
ஒருமையாலுணரும், குணங்களுமவற்றின் கொள்பொருள்
குற்றமற்றவை யுற்றதுமெல்லாம், உணர்ந்தவர் வாழும் ஓமமாம்
[புலியூர்.”

"பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்புஞ் சிறப்பர் வாழ்தில்லை."

"புந்தியினுன் மறைவழியே புற்பரப்பி நெய்ச்சமிதை கையிற் கொண்டு, வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர் சேரு மூர்மிழலையாமே."

## அப்ப மூர்த்திகள்.

"ஒன்றியசீர் இருபிறப்பர் முத்தீயோம்பும் உயர்புகழ் நான்மறை ஓமாம் புலியூர்."

"பறப்பையும் பசுவும் படுத்தும்பல—திறத்தவு
முடையோர் திகழும்பதி"

"அங்கமாறும நமறைநான்கும் தங்கும் வேள்வி
யர் தாம்பயிலும் நகர்"

CR38: 41720 V
N23

## சுந்தரமூர்த்தி

"பொய்யாத வாய்மையால் பொடிப்பூசிப் போற்றி
சைத்துப் பூசைசெய்து—கையினலெரியோம்பி
மறைவளர்க்கும அந்தணர் தங்கருப்பயறியலூர்"

"தூயநெய்யால், வட்டக்குண்டத்திலெரிவளர்த்
தோம்பி மறைபயில்வார்—அட்டக்குண்டத்துண்
பதறிந்தோ மேல் நாமிவர்க்காட்படோமே"

"சொற்பாலபொருட்பால சுருதியொருநான்குந்
தோத்திரமும் பல சொல்லித் துதித் திறைதன்றிறத்தே
கற்பாருங் கேட்பாருமா யெங்கு நன்கார்
கலைபயில் அந்தணர் வாழுங்கலைய நல்லூர்காணே"

"கலையடைந்த கலிகடியந்தணரோமப்புகையாற்
கண முகில்போன்ற ணிகிளருங் கலைய
நல்லூர் காணே"

## கண்டராதித்தர் திருவிசைப்பா

"ஓவாமுத்தீயஞ்சு வேள்வியாறங்கம் நான்மறையோ
ராவே படுப் பாரந்தணளாகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர் தங்களோடு முன்னரங்கேறி நின்ற கோவே"

## திருவாலிய முதனர்

"ஆத்தனைத்தான்படுக்கும் அந்தணர்
தில்லையம்பலத்துள்"                நிற்க



179856

இனி வேதங்களையும், வேதத்தில் விதித்த வேள்விகளையும், வேதவழியொழுகும் அந்தணரையும் இழித்துக்கூறுவோர் இன்னாரெனக் கூறுந்தேவாரப் பிரமாணங்களில் சிலவருமாறு.

"வேட்டுவேள்விசெய்யா அமண்கையர்"
"ஓதிஓத்து அறியா அமணாதர்"
"வேதவேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி யமணொடு தேரரை"
"வைதிகத்தின் வழியொழுகாதவக்கை தவமுடைக் காரமண்டேரரை"
"மறைவழக்கமிலாத மாபாவிகள்"
"அறுத்த அங்கம் ஆறாயின நீர்மையைக் கறுத்த வாழமண் கையர்"
"அந்தணாளர்புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர்"
"வேட்டு வேள்வி செயும் பொருளை விளிமூட்டுசிந்தை முருட்டமண்டேரரை"
"அழல தோம்புமரு மறையோர் திறம் விழலதென்னு மருகர்"—நிற்க

இன்னமும், ஞானசம்பந்தர் தம் தந்தையார் யாகஞ்செய்தற்குச் சிவபிரானிடம் பொருள் வாங்கித் தந்தையாருக்குக் கொடுத்ததாகச் சம்பந்தர் அருளிய தேவாரமும் பெரிய புராணமுஞ்சான்று பகரும்.

"சதுரம் மறைதான் துதிசெய்துவணங்கும்"

எனத்தமிழ்வேதம் அருளியபடி திருமறைக்காட்டில், நான்கு வேதங்களும் வேதபுருடனாகச் சிவபிரானைப் பூசித்து அடைத்த கதவை அவ்வேதத்துக்குச் சமமான தமிழ்வேதமே அக்கதவைத் திறக்கவும் மூடவும் செய்ததாகத் தமிழ்வேதமும் பெரிய புராணமுமுழங்கிக் கொண்டிருக்கின்றன—தமிழ்வேதங்களுக்கு முந்தியே உற்பத்தியான தொல்காப்பியமும்—இறைவனார் அகப்பொருளும்—திருக்குறளும் ஏனோ அக்கபாடத்தைத் திறக்க வலியில வாயின.

மேலேகாட்டிய தமிழ் வேதப்பிரமாணங்களாலே மூவாநான்மறை யென்ற தொடர்மொழி ஆரியநான்கு வேதங்களையே குறிக்குமெனவும், வேதங்களையும்—வேதவேள்வியையும், வைதீகவழியொழுகும்அந்தணாளரையும் நிந்தைபுரிவோர் புறப்புறச்சமையத்தோரான அமணர்முதலியோரென்றும் தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்கள் ஆரிய நான்கு வேதங்களே என்றும், ஆரியநான்கு

வேதங்களும் தமிழ் மறையே யென்றும் இரண்டும்பேதமின்மை, அதாவது ஏற்றத்தாட்சியில் லென்றும் நாட்டப்பட்டது. ஆனல் தமிழ் வேதமோ வேதத்தின் ஞானகாண்டப் பொருளையே பெரும் பாலும் நவிலுமென்று மேலோர் அறைவர்.—

## மூன்றும் பாகம்.

இனிச் சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திரங்களை, மூவா நான் மறையின் ஒன்றாகச் சேர்க்கலாமோ வென்பதை யாராய்வாம்.—

"வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்ரும்" என்று தமிழ் சித்தாந்த நூலாசிரியர் கூறிய படியால், சிவஞான போத முதலிய சித்தாந்த சாத்திரங்களெல்லாம் வேத உபநிடதங்களின் சாராம்சமே. வேதம் ஓர் பசு வென்றும் அதன்பால் சிவாகம மென்றும், அதன் நெய் நால்வர் திருநெறித் தமிழென்றும், அந்நெய்யின் சுவை சிவஞான போத மென்றும், மேலோர் பணித்தனர். இதனல் பசு இன்றி நெய் உண்டு என்று சொல்ல எவ்வாறு இயலாதோ, அவ்வாறே வேதமின்றிச் சிவஞான போதங்கிடையாதென்பதே வாய்மை. "வேதம் பசு, அதன்பால் மெய் யாகமம் நால்வர் ஓதுந்தமிழ் அதன் உள்ளுறு நெய்—போதமிகு நெய் யினுறுசுவையாம் நீள்வெண்ணெ மெய்கண்டான் செய்த தமிழ் நூலின் திறம்' எனும் வெண்பாவாலறிக. தாமருளிய சிவஞானபோத உதாரண வெண்பாக்களில், இருக்காதி மறைகளில் தாம்கண்ட கருத்தையேமெய்கண்டார் நிறுவியிருக்கின்ருரென்பதற்கு அடியிற் கண்ட அவர்கள் வாக்கே சான்று பகரும்.

"இக்கிரமத்தென் னுமிருக்கு"

"அருமறைகள் ஒன்றென்னது அத்துவித
மென்றறையுமாங்கு."

"மறையின் இயல் மறந்தாய்"

என்பனவே. அத்துவிதம் என்ற பதத்தின் மெய்ம்மையைக் கண்டு உலகோர்க்கு விளக்கினதனலேயே மெய்கண்டார் எனும் திருநாமம் இப்பரமாசாரியாருக்கு எய்திற்று. அப்படித் தாம் கண்டுகொண்டது இருக்கு முதலிய மறைகளைக்கொண்டு என்று இப்பரமாசாரியாரே தமிழ்ச் சிவஞான போதத்தில் வெள்ளிடை மலைபோல அருளியிருக் கும் நீர்மையைச் சான்ருேர்கள் கவனிப்பார்களாக: மெய்கண்ட தேவ நாயனருக்கே இருக்கு முதலிய மறைகள் ஆசிரியத்தன்மை ஆகி

விளங்குமாகில், ஆரியவேதம் தமிழ்மறைக்குச் சிறுமையுடைய தெனப்பொருள்படுமாறு நம் பல்லாவரம் சுவாமிகள் எழுதியிருப்பது அவர்கள் புத்தி நுட்பம் எத்தகைமைத்தோ? அறிகில்லேன். திருவாதவூர் அடிகளுக்குப் பிற்பட்டெழுந்தவர்கள் ஞானசம்பந்தரும், மெய்கண்டதேவருமாதலால் இவர்கள் அருளிய தேவாரமும் சிவஞானபோதமும் அடிகள் அருளிய திருவாசகத்திலுள்ள மூவா நான் மறையில் கொண்டுவந்து அடக்குவது எங்ஙனம் பொருந்துமெனவோர் ஆட்சேபனையை நம் ப. சுவாமிகளே எழுப்பிக்கொண்டு அவ்விருவர்களும் அருளிச்செய்த சொற்களும் பொருள்களும் என்றும் நிலைபெறுள்ள உண்மைகளை அறிவுறுப்பனவாமென்றும் ஓர் சமாதானமெழுதி யிருக்கிறார்கள். இப்போது சொற்களையும் பொருள்களையும் பற்றி விவாதமில்லை. சொற்களும் பொருள்களும் பாஷை யுண்டாயபோதே உண்டானவை. நூல்களைப்பற்றியே விவாதம். அடிகளுக்கு உபதேசித்த குருமூர்த்திகள் திருக்கரத்தில் தரித்திருந்தது வடமொழிச் சிவஞானபோதமே. ஏனெனில் தமிழ்மொழிச் சிவஞானபோதம் மெய்கண்டாரால் பிற்காலத்தில் *மொழிபெயர்க்கப்பட்டது. ஆதலால் இச்சமாதானம் நிலை பெறவில்லை. "வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள்" எனச்சித்தியார் பகருகின்றது. இதனல் வேதமுஞ் சிவாகமமும் தனித்தனி வெவ்வேறு நூல்களெனப் போந்தன. சிவாகமங்களின் பொருளைத்தான் சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திரங்களாகத் தமிழில் வகுக்கப்பட்டன. அப்போது இவைகளுக்கு அந்நியமாக வேதநூல் என்று வேறுநூல் விளங்குவதாகவுந் தெளிவாய்ப் புலப்படுகின்றது. மறை, வேதம் ஒருபொருட்கிளவிகள். ஆதலால் திருவாசகத்தில் ஆண்டிருக்கிற நான்மறை என்ற சொற்றொடரில் சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திரங்கள் அடங்கா. இன்னமும் சித்தியாரில் "புறச்சமய நெறிநின்றும்" என்னுஞ்செய்யுளில் ஆன்மாக்கள்

---

* சிவபிரான் தெட்சணாமூர்த்தமாயெழுந்தருளி நந்தி யெம்பெருமானுக்கு உபதேசித்த ஞானநூல் வடமொழிச் சிவஞான போதம், பன்னிரண்டு சூத்திரமெனவும் அதைத்தான் மெய்கண்டசிவம் தமிழில் மொழிபெயர்த்தருளி யதற்கு வார்த்திகமென்றும் பொழிப்புரை ஆதிய வியற்றினரெனவும், சுருதியுக்தி அனுபவத்தால் காட்டி, யாமெழுதிய சிவஞானபோத முதனூலாராச்சி யெனும் வியாசத்தில நன்கு காணலாம். இஃது சென்னை 'சைவமெ'னும் பத்திரிகையில் (துர்துபி ஹு மாசி மீ) வெளியிடப்பட்டிருக்கின்றது.

சோபான முறையாக ஒன்றின் மேலுள்ள ஒவ்வொருமார்க்கங்களைக் கைக்கொண்டு இறுதியில் சிவாகமங்கூறுஞ் சைவத்திறத்தடைவர் என நிறுவியிருப்பதில் அநேக சோபானமார்க்கங்கள் மத்தியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வாறு கூறியதில் "அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும் சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால் எனச் சொல்வதினாலும் ஆரணங்கள் வேறு சித்தாந்தசாத்திரம் வேறு எனவும் ஏற்பட்டது. ஆரணம்—மறை, ஒரு பொருட்கிளவி, ஆதலால் நான்மறை யென்ற விவாதச்சொற்றொடரில் சித்தாந்தசாத்திரங்கள் சேரா. இன்னும் விரிக்கிற் மிகப்பெருகும்—மேலாராய்வாம்.—

## நான்காம் பாகம்.

தொல்காப்பியம், திருக்குறள் இவ்விரண்டும் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள களையுந் தெரித்துரைக்குந் தமிழ் மறை களா மென்றும். இறையனார் அகப் பொருள், களவியல், இன்பத்துப் பால் ஒன்றனையே விரித்துரைக்கும் மாண்பிற்று மென்றும் இந்நூல்கள் மூத்தலில்லாது என்றும் இளமைச் செவ்வியோடு திகழுந் தமிழ் நான்மறைகளைச் சேர்ந்தவை யென்றும், இந்நூல்களோடு சிவஞான போதம் முதலியவைகளையும் தமிழ் மறை யெனவும், வாதவூர் அடிகள்.மூவா நான்மறையென்று திருவாசகத்திலருளியது இத் தமிழ் மறைகளையே யென்றும் ப. சு. எழுதியிருக்கின்றார்கள். சம்பந்தப் பெருமானாதியோர் அருளிய தேவாரம், திருவாசகம் தமிழ் மறையே யாயினும், மூவா நான்மறை யென்றது இருக்கு முதலிய நான்கு வேதங்களையே குறிக்கு மென்றும், சிவஞானபோத முதலியனருக்கு முதலியவேத உபநிடதங்களின் ஞான காண்டப்பொருளேயென்றும், பிரபலமான ஆதாரங் களுடன் மேலே 1-2 பாகங்களில் காட்டப்பட்டன. தொல்காப்பியம் எத்தன்மைத் தென்பதனை ஆராய்வாம்—

அதுமுத் தமிழில் ஓர் பாகமாகிய இயற்றமிழின் இலக்கண நூல். மற்றஇசை- நாடகத் தமிழ் இலக்கணம் இந்நூல் கூறிற்றிலது. அதனால் இந்நூல் பூரணமான தன்று. தமிழின் எழுத்துச் சொற் பொருள் இலக்கணங்களே இந்நூலிற் கூறப்பட்டுள. இது அகத்திய மென்னும் முதனூலுக்கு வழிநுலாகும்—பொருள் இலக்கணத்தில் அறம் பொருள் இன்ப மென்னும் மூன்றின் பகுதிகளை விளக்கும்— வீட்டு நெறிகுறிப் பானன்றிக் கூறவேண்டிய வாறு

கூறிற்றிலது. "அங்ஙிலே மருங்கின் அறம் முதலாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப" என்னுந் தொல்காப்பியச் சூத்திரமே என்—கூற்றுக்குச் சான்று பகரும்—

நச்சினார்க்கினியார் உரையில் "அகத்தியனாரும் தொல்காப் பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறரேன்றுணர்க" எனவரைந்திருப் பதையும் உணர வேண்டும்— இன்பத்தைப் பற்றிக் கூறியதிலும், காந்தருவம்என்னுங் களவொழுக் கத்தை விசேடித்துக் கூறியுள்ளது—களவொழுக்கமோ இக்கலியுகத்தில் பொருத்தமற்றதென்று தமிழரால் முற்றும் பரத கண்டமுழுது மென்றுஞ் சொல்லலாம் கைவிடப் பட்டு இறந்து பட்ட ஒழுக்கமாயிற்று "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்--ஐயர் யாத்தனர் கரணமென்ப" என்ற தொல்காப்பியச் சூத்திரமே இக் கூற்றை நிலைநாட்டாநின்றது. இத் தொல்காப்பியமும் ஆரியவேதங் களையே புகழ்ந்து கூறுகின்றது—"அறுவகைப்பட்டப் பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரத்தில் அந்தணராகிய முதல் வருணத் தார்க்கு வேதம் ஓதல் முதலிய அறுவகைத் தொழில் வேதத்தில் கூறப்படுகின்றவாறு விவரிக்கின்றது—"உயர்ந்தோர்க்குரிய ஓத்தி னான" வெனுஞ்சூத்திரத்தில் "ஓத்தின் ஆன" என்ற மொழிகட்கு வேதத்தினாற் பிறந்த வடநூல்களும் தமிழ்நூல்களும் என நச்சினார்க் கினியார் பொருள் கூறினபடியால் அவைகள் வேதத்தை முதலாகக் கொண்டமேன்மை வாய்ந்தனவெனவும் இவற்றிற்குத் தாயகமாக வேதம் உண்டு எனவும் விளங்கும் "வேண்டிய கல்வியாண்டு மூன்றி றவாது" எனுஞ்சூத்திரத்தில் வேதாந்தமாகா வாக்கியமாகிய தத்வமசி எனும் மூன்று பதங்களைக் கூறுகின்றது.—

இன்னமுங் "காமக்கூட்டங்காணுங்காலை மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள், துறைபமை நல்யாழ்த்துணைமை யோரியல்பே" என்று வேதவழித்தாகிய பிரம முதலிய எண்வகை மணங்களுள் கந்தருவ மணத்தையே களவியலுட் கூறுகின்றது— இவை முதலா கிய நிமித்தங்களால் தொல்காப்பியனார் ஆரிய வேதத்தைப் புகழ்ந்தே கூறினாரென்று சொல்லவரும்.—அல்ல தூஉம் வீட்டுநெறிபயப்பதூ தூஉம், வேதமென்றுங்கூறினர்—இதன் முடிபு என்ன வாகிறதெ னின் தமிழ்பாஷையின், எழுத்துச்சொல் இவற்றின் இலக்கணங் கூறின தொல்காப்பியனார் பொருள் இலக்கணங்கூறத் தொடங்குழி ஆரியவேதத்தை யெடுத்தாண்டு அவ்வேதக் கருத்தையே பொரு

ளிலக்கணத்தில் அமைத்தாரேனத் திண்ணமாய்ச்சொல்ல இடந் தருகின்றது— இத்தகைய பெருமைவாய்ந்த வேதங்களை நம் ப.சு. வே அவர்கள் இழித்துக்கூறித் "தமிழ்மறைகள் அவ்வாரிய நூல்களோடு ஒப்பவைத்தெண்ணப் படுஞ்சிறுமை யுடையவாகாது" என்று எழுதி யது பொருத்தமிலதென்று துணிவாய்ச் சொல்லலாம்—தோல் காப்பியத்துக்கு முதனூலாகிய அகத்தியம் இறந்து பட்டிருப் பதை யோராமல் ஆரியவேதம் இறந்து பட்டதென்னுங்கூற்றும் நகைப்புக் கிடமாயிருக்கின்றது—இனி இறையனார் அகப்பொருளோ வெனின் "அன்பின் ஐந்திணைகள வெனப்படுவது அந்தணர் அரு மறை மன்றலெட்டினுள், கந்தருவ வழக்கமென்மனார் புலவர்"-என்ற முதற்சூத்திரமும் ஆரியவேதம் உளதெனக் கூறும்' இதனால் இந் நூல் முற்றிலும் அருமறையில் விதித்ததைக்கூறுநின்றதெனவிளங்கு கிறது-வேதத்தைஅருமறையென்றும், அதுஅந்தணக்குரியதேன் றும் இறையனாராகிய மதுரை சோமசுந்தரக்கடவுள் அருளியிருப்ப தனால், வேதமே முதனூலெனக் கொள்ளத்தக்கதாகின்றது.—ஆத லால் மூவா நான் மறை எனப்படுவதூஉம் அதுவேயாம்,—

இனி எஞ்சிநின்ற திருக்குறள் எனும் நூல் மூவா நான்மறை யென்பதன்பகுதியா வென்பதை ஆராய்வாம்—திருக்குறளின் சிறப் புப்பாயிரத்தில் "நான் மறையின் மெய்ப்பொருளை, முப்பொருளா நான் முகத்தோன்—தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த— நூன்முறை" எனவும்.

"மெய்யாய வேதவிழுப்பொருள் விளங்க்கப்பொயயாது
தந்தா னுலகிற்குத்தான் வள்ளுவராகி—யந்தாமரை
மேலயன்"—எனவும்

———

"முறைமையால்வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளு வனார்—ஓத அழுக்கற்றதுலகு" எனவும் ஆரிய வேதம் நான்கின் பொருளே தமிழ் பாஷையில் குறளென்னும் நூலிற் சொல்லப்பட் டிருக்கின்றதென்பது பெறப்படுதலால் மூவாநான்மறை யென்றது குறளுக்கு ஆதிநூலாகிய ஆரியவேதம் நான்கினையுமே யென்று உறுதியாய்ச் சொல்லலாம்...

திருக்குறளின் பாக்களிலேயே "மறப்பினும் ஒத்துக் கொள லாகும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங்குன்றக்கெடும்" எனவும்

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியா நின்றது
மன்னவன்கோல" எனவும்

ஆபயன்குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவாவிடின்" எனவும்

முதல் வருணத்தாராகிய அந்தணர் ஒழுக்கத்தையும் அவர்கட்குரிய நான்கு ஆரியவேதங்களையும் திருவள்ளுவரே விதந்து கூறுவராயின் ப. சு. வே. அவர்கள் ஆரியவேதத்தைக்குறை கூறுவது தேவர் திருவள்ளுவரையும் இறையனாராகிய சிவபெருமானையும் இகழ்ந்தவாறாகும்.

இத்துடன் இவ்வியாசத்தை நிறுத்துகின்றேன்—இவ்வியாச முடிபுளா யென்னவெனில் மறை, வேதம், ஆரணம் முதலிய மொழிகள் ஆரியவேதங்களையே குறிக்குமெனவும், அவ்வேதங்கள் நான்கேயெனவும், தமிழ் மறைகள் திருமுறையெனவே பெயர்பெற்றதெனவும் அத்திருமுறைகள் சுமார் ௲. ஆண்டுகட்கு முன்னரே முதற்கண் பதினொன்றாய் வகுக்கப்பட்டுப் பின்னர்—௰௨ ஆய் வகுக்கப்பட்டிருக்கின்றதெனவும், நான்மறை யென்றது ஆரியவேதங்களாகிய ருக் யசுர் சாமம் அதர்வணமே யாமெனவும் "மூவா" யென்ற அடைமொழி கொடுத்திருப்பதனால் அப்பொருள்களை வேறுபடுத்தாதெனவும், ஆரியமறைகள் உண்டானகாலம் முதல் இதுகாறும் ஓரேநிலைமையில் நிலைபெற்றிருப்பதெனவும், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், இத்தமிழ் நூல்களிலும், ஆரியவேதங்களையெடுத்துப் புகழ்ந்திருக்கின்றதெனவும், ஆரியவேதங்களின் ஞானகாண்டப் பொருளையே தேவாரம், திருவாசகம் முதலிய பனிரெண்டுதமிழ் வேதங்களிலுங் கூறப்பட்டதெனவும், சிவஞானபோத முதலிய சைவசித்தாந்தத் தமிழ்நூல்களும் ஆரியவேதாந்தப் போருளேயாமெனவும், திருமுறை ஆதிய பிரபல பிரமாணங்களால் நன்கு நாட்டப்பட்டன. சூரியனார் கோவில் ஆதீனகர்த்தராகிய சித்தாந்தசைவ உண்மையை யோர்ந்துசிவாநுபூதிச் செல்வராய் விளங்கிய முத்துக்குமாரதேசிக மூர்த்திகளால் "சித்தாந்த சிகாமணி" யெனச்சிறப்புப்பெயர் கொடுக்கப்பெற்றும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் ஆதியோராலும் மிகவும் புகழ்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஸ்ரீகாசிவாசி சாம்பசிவ சிரேஷ்டர்களாகிய பிரமஸ்ரீ செந்திநாத ஐயரவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் "தேவாரம்

வேதசாரம்'' எனும் நூலே நான் எழுதிய இவ்வியாசத்தின் உண்மையை நிலைபெறச்செய்யா நிற்கும்.—

இன்னமும் ஒன்றை இங்குச் சொல்லாதிருக்கக் கூடவில்லை. ''மூவாநான்மறை முதல்வா'' என்ற சுருதி வாக்கியத்தில் மூவா என்ற அடைமொழி பண்புச் சொல்லை 'முதல்வா என்ற சொல்லோடு புணர்த்திப் பொருளுரைப்பதுவே ஆழ்ந்த இன்பமான பொருளைத் தருகின்றது. அப்படியானால் என்றும் அழியாது இளமைச் செவ்வியோடு விளங்கும் சிவம் என நன்கு பொருள் படுகின்றது. ''என்றுமோரியல்பினர்'' என்றுமிளையாய் என நம்பெரியோரும் 'மூவா முதல்வனைப் போற்றி செய்தே' என மற்றும் ஆன்றோரும் பணித்தனர் சு. வே. அவர்கள் இப்பொருளை கொண்டு விளக்கி இருந்தால் யாதொரு விவகாரமுமில்லை.

நம் நண்பர் ப. வே சுவாமிகள் எழுதிவரும் திருவாசக விரிவுரை உண்மைப் பொருட்களுடன் ஆன்றோர் ஆட்சியைத் தழுவி வெளி வந்தால்மட்டும் தமிழ் மக்களாகிய சைவப் பெருமக்கள் சமஷ்டியாய் அங்கீகரிப்பார்கள். அன்றேல் திரிபுரை யெனக்கொள்வர். இதை வாசிப்போர் ''சமன் செய்து சீர்தூக்குங்கோல் போலமைந் தொருபாற்—கோடாமை சான்றோர்க்கணி'' யெனும் நம் தமிழ் ஒழுக்க நூல் வாக்கியத்துக்கு இலக்கியமாவார்களென்று நம்புகின்றேன்.

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வமில்லெனு நான்மறைவாய்ச்சேம்
பொருள்வாய்,—மைவைத்தசீர்த்திருதேவாரமுந்திருவாசகமு
முய்வைத்தரச்செய்த நால்வர் பொற்றாளெம் முயிர்த்துணையே.

சுபம். சுபம். சுபம்.

திருச்சிராப்பள்ளி.
28—5—22

திரு. மா. சாம்பசிவம் பிள்ளை.

---

ஓர் குறிப்பு.—இவ்வாராய்ச்சி, யெழுதிமுடித்தபின்னர் வெளிப்போந்த பன்னிரெண்டாஞ் சஞ்சிகையோடு போற்றித்திருவகவலின் உரை முற்றுப் பெற்றிருக்கின்றது—உரையின் முடிவில் நம் நண்பர் சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதியிருப்பதாவது. போற்றித்திருவகவலில் ''என்

பத்தேழாம் அடிமுதல் நூற்றிருபத்தைந்தாமடியாறும் வடமொழி எசுர் வேதத்திடை நின்ற திருவுருத்திரமேபோல் வணக்கமந்திரவுரைகூறி அடிகள் முடித்தருளினர்'' என்பதே—இது மிக்கவியப்பாயிருக்கின்றது—இவ்வளவு நீண்டதோர் ஆராய்ச்சியெழுதவிடங்கொடுத்து வடமொழி வேதத்தைப் பலவாறு குறை கூறிய நண்பர் இவ்வாறு எழுதியிருப்பது இறுதியில் சத்தியத்தையேநாடி நானும் மறியேன் அவளும் பொய்சொல்லாள் என்றபடி அவர்கள் மனம்—மொழி--வாய்மை வயப்பட்டு எமது பக்கமே நின்ற நிலைமையையுங் காட்டுகின்றது—திருவாசகத்தின் மற்றைப்பாகங்கட்கும் விரிவுரை எவ்வகை ஆட்சேபனைக்கு மிடமின்றி ஆன்றோர் ஆட்சியைப்பின்பற்றி விரைவில் வெளிவரவேண்டுமெனத் திருவருளைப்பிரார்த்திக்கின்றேன்—எடுத்தகருமத்தை முடிபு பெறச்செய்ய வேண்டுமென்பதே மேலோர் துணிபு.

திரு. மா—சா

179856

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 20 | எக்கமுற்று | எக்கற்று |
| 2 | 9 | நால்வர | நால்வா |
| 3 | 29 | எனப்யிரித்து | எனப்பிரித்து |
| 4 | 14 | அதிநூலா | ஆதிநூலா |
| | 19 | தொண்ணூத்ரெு | தொண்ணூற்ரெு |
| 6 | கடைசிவரி | நூல்க்ளில் | நூல்களில் |
| 7 | 7 | லெட்சணத்தை | லட்சணத்தை |
| | 8 | விவரங் | விவரணங் |
| | 11 | வலாநீயம் | வலாயனம் |
| | 12 | வைதீக | வைதிக |
| 8 | 22, 23 | இந்த வரிகளை யெடுத்துட்போடவேண்டும். | |
| 9 | 32 | புலப்படும் | புலப்படுத்தும் |
| 10 | 10 | பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| | 21 | பன்னிரெண்டென | பன்னிரண்டென |
| | 26 | திருவாரூர் தியாசர் | திருவாரூர்த் தியாகர் |
| | 33 | நிவர்த்தி | நிவிர்த்தி |
| 11 | 4 | ரெண்டென | ரண்டென |
| | 5 | ரெண்டாக | ரண்டாக |
| | 6 | நிதூஉசல் | நிஷூசல் |
| | 19 | வியம்பேடீ | வியம்பேடி |
| | 20 | றிருந்தவர்க்கு | றிருந்தவருக்கு |
| | | தெருயா | தெரியா |
| | 24 | அன்ருலின | அன்ருலின் |
| | 26 | நால்வர்க்கருள | நால்வர்க்கருள் |
| | 27 | மூரத்தி | மூர்த்தி |
| 12 | 10 | ஆராயபுக | ஆராய்ப்புக |
| | 23 | சேட்க | கேட்க |
| 13 | 12 | குரிதகே | குரித்தே |
| | 26 | பிர்மதேவரின் | பிரமதேவரின் |
| | 27 | ஸங்ந்தரர் | ஸநந்தர் |
| | | ஸநாதரர் | ஸநாதர் |
| | 28 | பிர்மதேவ | பிரமதேவ |
| 13 | 34 | தட்சணை | தட்சிணை |
| 14 | 2 | ஒருப்படாத | ஒருப்படார்த |
| • | 4 | தட்சணை | தட்சிணை |
| • | 8 | தட்சணை | தட்சிணை |
| | 9 | பாஷீய | பாஷிய |
| | 18 | சரிததிரங் | சரித்திரங் |
| | 20 | ஓர் | ஓர் |
| | 24 | சஙகராச்சாரிய | சங்கராசாரிய |
| | 27 | தட்சணை | தட்சிணை |
| 16 | 24 | பஞசாட்சரத்தை | பஞ்சாட்சரத்தை |
| | 28 | வேத் | வேத |
| 17 | 21 | பஸ்ப | பஸ்ம |

| | | | |
|---|---|---|---|
| 18 | 12 | யிஙலகு | யிலங்கு |
| | 20 | விருப்புட்ன் | விருப்புடன் |
| | 22 | யாண்டாரநம்பி | யாண்டார்நம்பி |
| | 24 | எனவும | எனவும் |
| 19 | 28 | ப்ரரோசிதம் | ப்ரசோதிதம் |
| | 29 | மஹதொ | மஹதோ |
| | 29 | மேத்தய | மேதத் |
| | 30 | திருகவேதோ | திருக்வேதோ |
| 20 | 3 | வாயுகம்மிளத | வாயுசம்மிதை |
| | 4-5-6 | இந்த மூன்று வரிகளையு மெடுத்துவிடவேண்டும். | |
| | 11 | பாடலோராடலராகி | பாடலோடாடலராகி |
| | 13 | மநதிர | மந்திர |
| | 30 | பண்ணமரும் | பண்ணமரும் |
| 21 | 10 | பாடலுகந்தஅருக்ளகயே | பாடலுகந்ததிருக்கையே |
| | 16 | மறைநான்கும் | மறைகளுன்கும் |
| 22 | 29 | நிரயம | நிரயந்தன்னில் |
| | 31 | சமயாச்சாரியர் | சமயாசாரியா |
| 23 | 5 | மறைு | மறை |
| | 17 | ஆறங்கம | அங்கம் |
| | 21 | ணநீர் | ணண்ணீர் |
| | 28 | உளரன் | ஊரன் |
| 24 | 12 | சமயாச்சாரியர் | சமயாசாரியர் |
| 24 | கடைசிவரி | ஓமாம் | ஓமமாம்புலியூர் |
| 25 | 1 | புலியூர் என்பதை விட்டுவிடவும் | |
| | 3 | செய்ச்சுமிதை | செய்சமிதை |
| | 9 | திறத்தவு | திறத்தவும் |
| | 11 | நான்கும் | நான்குடன் |
| | 32 | ஆக்தனை | ஆத்தனை |
| 26 | 27 | இறைவனார் | இறையனார் |
| | 31 | வைதீக | வைதிக |
| 27 | 10 | தமிழ்சித்தாந்த | தமிழ்ச்சித்தாந்த |
| 27 | 14 | தமிமுென்றும் | தமிழென்றும் |
| | 18 | அதன் | அதனின் |
| 28 | 82 | தெட்சணு | தெட்சிணு |
| | | வேதவிழு | வேதப்பொருள் |
| 31 | 22 | ப்பொருள் விளங்கப் பொய்யாது | விளங்கப் பொய்யாது |
| 32 | 1 | ஆதியா | ஆதியாய் |
| | 2 | கோல | கோல் |
| | 5 | ஒழுக்கத்தை | ஒழுக்கத்தை |
| | 24 | பனிரெண்டு | பன்னிரண்டு |
| | 31 | சுவாமிநுத | சுவாமிநாத |
| | 32 | சாம்பசிவ | சாம்பவ |
| 33 | 5 | பண்புச்சொல் | எச்சச்சொல் |
| | 22 | மறைவாய்ச்செம்பொருள் | மறைச்செம்பொருள் |
| | 23 | திருதேவார | திருத்தேவார |

குறிப்பு:—இத்தனை பிழை யுண்டாயதற்குக் காரணம் என் வார்த்தீக தசையே—பெரியோர்கள் மன்னிப்பார்களாக.

## இதுகாறும் வெளிவந்த ஆராய்ச்சி உரைகள்.

I திருப்பெருந்துறை விளக்கம்

II திருத்தொண்டர் புராணத்தில் திருமலைச்சருக்க ஆராய்ச்சி

III சிவஞானபோத முதனூலாராய்ச்சி

IV திருக்குறளின் திருவுள்ளக்கருத்து

V ஸ்ரீ இராமனும் இராவணனும்

VI மூவாநான்மறை யென்ற சொற்றொடர் ஆராய்ச்சி

## இனி வெளியிடச் சித்தமாயிருக்கும் உரைகள்.

VII கோகழிப் பெயருண்மை

VIII வேதமுஞ் சைவத் திருமுறைகளும்

IX திருநான்மறை விளக்க ஆராய்ச்சி

X திருவாசக விரிவுரையில்—நான்கு அகவல்களின் உரையில் காணப்படும் பிற ஆசங்கைகளும் அவற்றின் ஆராய்ச்சியும்